மலர் - 27 / இதழ் -04 /ஏப்ரல் 2026
Volume -27/ Issue - 04 / April 2026
தமிழ் மாத இதழ் /தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
# VALARUM VINNARASU



**வாசகர்களுக்கு உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துகள்!**

**பின்னானவைகளை மறந்து ...
பரம அழைப்பின் பந்தயப்
பொருளுக்காக இலக்கை
நோக்கித் தொடருகிறேன்.**

(பிலிப்பியர் 3:13-14)

# பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

மார்ச் மாதத்தின் முதல் தேதி, எஸ்.கைலாசபுரம் தூய யோவான் சிஎஸ்ஐ தேவாலயத்தின், லெந்து கால சிறப்புக் கூட்டங்களில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டேன்.

மார்ச் 8 ஆம் தேதியன்று சென்னையிலுள்ள பெருங்களத்தூர் சிஎஸ்ஐ தேவாலயத்தில் தேவனுடைய வார்த்தையையும், ICGM செய்துவரும் அருட்பணிகளைக் குறித்தும் பகிர்ந்து கொண்டேன்.

மார்ச் 13-15 ஆகிய தேதிகளில் தென்காசி மாவட்டத்திலுள்ள அகஸ்தியார்பட்டி சிஎஸ்ஐ திருச்சபையில் நடைபெற்ற, லெந்து கால சிறப்புக் கூட்டங்களில் தேவனுடைய வார்த்தையையும், ICGM செய்திகளையும் பகிர்ந்து கொண்டேன்.

இந்தத் திருச்சபையின் ஆயர் மற்றும் குருசேகரத் தலைவர் அருள்திரு. எட்வர்டு டேனியல் ஆயர் அவர்கள் பல வருடங்களாக ICGM ஊழியத்திற்கு அறிமுகமானவர். வடஇந்தியாவின் துர்க் (Durg) திருச்சபையில் இருக்கும்போதும், ICGM பணிகளுக்கு பேருதவியாக இருந்தார். அவருக்கு இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்ச் 18-19 ஆகிய தேதிகளில் அகில இந்திய வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதில் நானும் எனது மனைவி ஷீலாவும் கலந்து கொண்டோம்.



புதிய பொதுச்செயலர்
அருள்திரு. டேவிட் சாலமோன்



அகில இந்திய வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் பயிற்சிப் பட்டறை



அகஸ்தியார்பட்டி சிஎஸ்ஐ திருச்சபையில் நடைபெற்ற லெந்துகால சிறப்புக்கூட்டம்

மார்ச் 27ஆம் தேதி ICGM-மின் நிர்வாகக் குழு சென்னையில் கூடியது. மார்ச் 28ஆம் தேதி புதிய பொதுச் செயலராக அருள்திரு. டேவிட் சாலமோன் அவர்கள் அர்ப்பணிப்பு செய்யப்பட்டார்.

புதிய பொதுச்செயலராக

தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:
அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு.V.S. தம்பிராஜ்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்

இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 05 |
| மார்ச் மாத வேத விடைகள் | 09 |
| சிங்கக்குகையில் ஜெபிக்க வா! | 10 |
| துதித்து மன்றாடுவோம்! | 13 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே | 31 |
| வாலிபர் பகுதி | 34 |
| சரியான விடை எழுதியவர்கள் | 36 |
| வேத வினாக்கள் | 37 |
| நடப்புச் செய்திகள் | 38 |


ஆண்டுச் சந்தா:₹200/- ஆயுள் சந்தா:₹1500/-

வளரும் விண்ணரசு

நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷினின் (ICGM) துதி-ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.

ICGM
58/1 முத்தாலம்மன் கோயில் தெரு,
சேலையூர், சென்னை- 600 073.
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com

வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

## ICGM

**தரிசனம்: (Vision Statement)**

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்: (வெளி.7:9)**

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்."

**செயல்திட்டம்: (Mission Statement)**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்: (மத்தேயு 28:19-20)**

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.



## வாழ்த்துகிறோம்!

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனில் வாலிபராய் இணைந்து,
அலுவலகத்தில், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம்/சட்டீஸ்கர்
மிஷனரிப் பணித்தளங்களில் ஊழியராகவும்
மற்றும் 18 ஆண்டுகள் பொதுச் செயலராகவும்,
தொடர்ந்து 46 ஆண்டுகள் இயக்கத்தில் அருட்பணியாற்றி,
31 மார்ச் 2026 அன்று ஓய்வு பெறும்
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன் அவர்களை இயக்கத்தின் சார்பாக
நம் ஆண்டவர் இயேசுவன் திருப்பெயரில் வாழ்த்துகிறோம்.
அவர் ஓய்வு பெற்ற நாட்களிலும் அவர் மூலமாக ஆண்டவர் நாமம்
மகிமைப்பட, நீடித்த ஆயுளுடன் உடல் நலத்துடன் இன்னும் பல
ஆயிரங்களுக்கு அவர் ஆசீர்வாதமாய் இருக்க, ஜெபிக்கிறோம்.



## வரவேற்கிறோம்!

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் பணித்தள
ஊழியத்தின் கனியாக, ஆண்டவரது சீடராக மாறின
அருட்திரு.S. டேவிட் சாலமன், இயக்கத்தின்
வேதாகமக் கல்லூரியில் **(India Church Growth College)** பட்டம் பெற்றார்.
தமிழகப் பணித்தளங்களில் ஊழியராகப் பணியாற்றிய பிறகு,
கன்னியாகுமரி மாவட்டத்தில் இயக்கத்தின் தரிசனம் பரப்பும் ஊழியத்தில் இணைந்தார்.
சென்னை ஜுபிலி மெமோரியல் வேதாகமக் கல்லூரியில் **Bachelor of Theology**,
பட்டம் பெற்றபின்,மெட்ராஸ் வேதாகமக் கல்லூரியில் **(Madras Theological Seminary)**
**Master of Divinity** பட்டம் பெற்று,கடந்த ஓராண்டாக துணைப் பொதுச்செயலராக
பணியாற்றியபின், 01 ஏப்ரல் 2026 முதல் முதல் இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
இயக்கத்தின் பொதுச்செயலராக பொறுப்பேற்றிருக்கிறார்.
அருள்திரு.S. டேவிட் சாலமன் அவர்களை இயக்கத்தின் ஊழியர்களாக வாழ்த்தி
வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இயக்கத்தை நடத்த, ஆண்டவரது ஞானம்,
வழிநடத்துதல் மற்றும் கிருபை அவருக்குக் கிடைக்க ஜெபிக்கிறோம்.



அருட்செய்தி

# பரம அழைப்பின் பரிசு

Rev.A. லெஸ்லி நாகராஜன்

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும், சிறப்பானவர்கள்- உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் (எபேசியர் 1:4)- தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, இயேசு கிறிஸ்து மூலமாகத் தமக்கு சுவீகாரப் புத்திரராகும்படி முன் குறிக்கப்பட்டவர்கள் (எபேசியர் 1:6) என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.



இவ்விதமாக தெரிந்து கொள்ளப் பட்டவர்களுக்கு, அவர் ஒரு திட்டத்தையும், சித்தத்தையும் வைத் திருக்கிறார்.

இந்தத் தேவத்திட்டத்தையும்- சித்தத்தையும் நிறைவேற்றுவதற்காக வாழ்ந்து நித்திய வாழ்வைப் பெறும் வாழ்க்கையை, ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிட்டு, பரிசுத்த பவுல், பிலிப்பியர் 3ஆம் அதிகாரத்தில் இதை விவரிக்கிறார்.

இந்தப் பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்ளும் வாழ்க்கையைப் பற்றி, இந்தச் செய்தியில் பார்ப்போம்.

பிலிப்பியருக்கு எழுதின கடிதத்தில் 3ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல், தமது வாழ்க்கையின் நோக்கம் என்ன?, எதற்காகப் பிடிக்கப்பட்டார்?, எப்படி வாழ்கிறார்?, பந்தய வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள் மற்றும் அவரது நம்பிக்கையையும் குறித்துக் கூறுகிறார்.

**பரி.பவுலின் பந்தய இலக்கு:**

இயேசுவை அறிவதும், உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பதும், பாடுகளில் பங்கு கொள்வதுமே தமது இலக்காக பரிசுத்த பவுல் கூறுகிறார்.

இயேசுவை அறிந்து கொள்வது ஒருநாளில் முடிவடைவதல்ல; மாறாக, இயேசுவை அறிந்து கொள்வது என்பது, அவரது சித்தம் அறிந்து, அதற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதாகும். “ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பின வராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்” (யோவான் 17:3) என வாசிக்கிறோம்.

இயேசுவை அறிவதே நித்திய ஜீவன். “தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தமும் சுவிசேஷத்தினிமித்தமும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்” (மாற்கு 8:35) எனவும் வாசிக்கிறோம்.

அவரை அறிவதற்காக

ஜீவனையும் கொடுக்கிற வாழ்க்கை முறையை தெரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

இரண்டாவதாக, ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் வல்லமையால், பாவத்தின் மேலும் வெற்றி பெற்று புதிய வாழ்க்கை வாழுகிறோம். இது பரிசுத்த பவுலின் இலக்காக இருந்தது.




மூன்றாவதாக, இயேசுவின் பாடுகளில் பங்கேற்பதைக் குறித்துக் கூறுகிறார். கிறிஸ்துவுடனே நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூட பாடுபட்டால் நாம் உடன் சுதந்தரர் எனக் கூறுகிறார்.

**பந்தயத்தின் முறை:**

போர் முடியுமுன் வெற்றி விழா எடுப்பது அறிவின்மை. பரி. பவுல் தன்னைப்பற்றிக் கூறும்போது, நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவ னானேன் என எண்ணவில்லை எனக் கூறுகிறார். கடந்த கால வெற்றிகள் இன்றைய வாழ்க்கைக்கு உதவுவதில்லை.

பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய் கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கே அப்படிச் செய்கிறோம் (1கொரிந்தியர் 9:25) என உற்சாகப்படுத்துகிறார்.

**எனது வாழ்வில் அவரது சித்தம்:**

கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதைப் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன் (பிலிப்பியர் 3:12) என வாசிக் கிறோம். நம்மில் பலருக்கும் இந்த உலக மனிதருக்கும் "எப்படியாவது" பிழைக்க வேண்டும் என்பதே குறிக்கோள்.

எதற்காகப் பிடிக்கப்பட்டேன்? என்று அறியாமலே இருந்து, ஊழியமும் செய்து முடித்துவிடுகிறவர்கள் உண்டு. நல்ல வாய்ப்பு, நல்ல தகுதிக்கேற்ற பணி (ஊழியம்) எனத் தேடுவோரும் அநேகர். பிழைப்பதுதான் நோக்கம் என்றால் அந்த வாழ்க்கை மிகவும் பரிதாபத்திற்குரியது.

வயிற்றுப் பிழைப்பிற்கு ஆண்டவரைத் தேடுவோரைப் பார்த்து, இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனிதர்களைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். (1கொரிந்தியர் 15:19) என வேதம் கூறுகிறது.

இந்த உலகத்தில் எப்படியாவது வெற்றியாக வாழ்ந்து விட வேண்டும். அதற்கு இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன் என்பவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

**ஆசையாய் தொடராமல் அவதிப்படும் கூட்டம்:**

ஒருநாளில் வைராக்கியத்தோடு இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டு, பிறகு, மற்றவர்களைப் பார்த்து, அல்லது பின்னோக்கிப் பார்த்து மனங்கசந்து வாழுகிற மக்கள் அநேகர் உண்டு. இந்தக்

கூட்டத்தில் தேவனுடைய ஊழியரும் உண்டு.

ஒரு இளம் ஊழியர் என்னிடம் வந்து, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அண்ணன்" என்றார். "கர்த்தருடைய கிருபையால் ஒரு ஆலயம் கட்டி, ஒரு காரும் வாங்கத் தேவன் கிருபை செய்தார்" என்றார்.

நான், "அப்புறம் தம்பி?" என்றேன். அதற்கு அவர், ஒரு பிரபலமான ஊழியரின் பெயரைக் கூறி, "நான் அவரைப் போல ஆக வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டி ருக்கிறேன்" என்றார்.

ஆண்டவரால் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை விட்டுவிட்டு மற்றவரைப் போல மாற ஆசைப்பட்டுத் தொடரும் மக்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

**பந்தயக்காரரின் வாழ்க்கை:**

கிறிஸ்துவினாலே எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதற்காக வாழாமல் வேறு சிந்தையாய் வாழுகிறவர்கள் உண்டு.

நமக்கு இரண்டு சிந்தைகள் உண்டு. ஒன்று தேவனுக்கு பிரியமானதாக வாழுதல்; மற்றொன்று பணத்துக்காக வாழுதல். நமது வாழ்க்கையை ஆண்டவரது கையில் ஒப்புக் கொடுக்கும் போது நமது சிந்தை மறுரூபமடைகிறது.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2) என வாசிக்கிறோம்.

மனம் மறுரூபமாக தேவனுடைய வார்த்தைகளின்படி நடக்க வேண்டும். உண்மையான சீடத்துவம் என்பது, நமது வசதிகளை மையமாகக் கொண்டதல்ல. ஆனால், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையே.

**பந்தயத்தில் ஓடுகிறவர்கள் சந்திக்கும் சோதனை:**

வாழ்க்கைப் பந்தயத்தில் பரிசுக்காக ஓடுகிறவர்கள் ஒருநாளும் பின்னோக்கிப் பார்க்கக்கூடாது.

எகிப்து தேசத்தின் உணவுகளை நினைத்து அழும் மக்களும் உண்டு. (எண்ணாகமம் 11:4,5). இப்படிப் பட்டவர்கள் விசுவாசிகளாகவும், ஊழியக் காரர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் உற்சாகமாக தேவனைப் பின்பற்றத் தொடங்கி, பாதியில் சோர்ந்து, பின்னோக்கிப் பார்ப்பவர்கள் பரிதாபத்துக்குரியவர்களே.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் ஊழியத்தில் ஒரு அலுவலகப் பணியாளராக இணைந்த நான், மதுரையில் சௌராஷ்டிரா இன மக்கள் நடுவிலும்,பல்கலைநகர் ஆலயத்திலும், வட இந்தியாவில் 19 ஆண்டுகளும், தலைமை அலுவலகத்தில் 18 ஆண்டுகளும் தேவ பணி செய்ய தேவன் எனக்கு கிருபை அளித்தார். இந்த ஊழியப் பயணங்களிலெல்லாம் என் வாழ்க்கையை, வேதவசனத்தின் வெளிச்சத்தில் ஒப்பிட்டுப் பார்க்க, கற்றுக் கொள்ள எனக்கு தேவன் கிருபையளித்தார்.

ஐம்பது ஆண்டு கால சீடத்துவ வாழ்க்கையில் பலதரப்பட்ட மக்களை சந்தித்திருக்கிறேன். பிலிப்பியர் 3:18-

19இல் சொல்லப்பட்ட சிலுவைக்கு பகைவர்களையும் கண்டிருக்கிறேன்.

பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12) என்ற வசனத்தை விட்டுவிட்டு, துணிகரமாகப் பொய் சொல்லும் (வயிறே தேவன் என வாழும்) மக்களைக் காணும்போது, அவர்களது ஆத்துமாக்களுக்கு நேரிடப்போவதைக் குறித்த பயம் வருகிறது.

சிலுவைப் பகைஞரின் வேறொரு அடையாளம், இவர்கள் உலகத்துக்கடுத்தவைகளையே சிந்திக்கிறார்கள். “எப்படியாவது உயர வேண்டும் என்ற பந்தயப் பொருளை”(?) கருத்தில் கொண்டு வாழும் மக்கள் சிலுவைக்கு பகைஞர்கள்.

**பந்தயக்காரராரின் நம்பிக்கை:**

நமது குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது என பவுல் எழுதுகிறார். நமது வாழ்க்கை முற்றிலும் நிரந்தரமற்றது. நாம் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் (எபிரேயர் 11:13) என அறிக்கையிட்டு விசுவாசத்தோடு கடந்து செல்லவே அழைக்கப் பட்டிருக்கிறோம்.

நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீண்டுமாக வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். (பிலிப்பியர் 3:20).

கடைசியாக சில வசனங்களைக்கூறி முடிக்க விரும்புகிறேன். “பந்தயசாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும் ஒருவனே பரிசைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலும் இச்சையடக் கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படி அப்படிச் செய்கிறோம்.” (1 கொரிந்தியர் 9:24-25).

நான் இயேசு கிறிஸ்துவினால் பிடிக்கப்பட்டதின் நோக்கம், நான் அவரைப் போல மாறுவதற்காகவே. (பலிப்பியர் 3:12).

இந்த உலகத்தில் வாழும்போது, நம்மை பின்னோக்க வைக்கும் பல கவர்ச்சிகள் உண்டு. ஆனாலும், பின்னான வெற்றிகளையும், தோல்விகளையும் மறந்து அவருடைய சித்தம் செய்ய அவரைப் போல மாற அழைக்கப்படுகிறோம்.

நமது வாழ்க்கை ஆவியானவரின் ஆளுகைக்குட்பட்டு இருக்கும்போது மட்டுமே, நாம் வெற்றியுள்ள பந்தயக் காரராக வாழ முடியும்.

சோதனைகள் இல்லாமல் வெற்றியில்லை. இவை எல்லாவற்றிலும் நம்பிக்கையை நாம் இழந்து போகக் கூடாது.

மரணபரியந்தம் உண்மையாயி ருப்போமானால், அப்பொழுது ஜீவ கிரீடத்தை நமக்குத் தருவார். கர்த்தர்தாமே நமக்கு இப்படிப்பட்ட கிருபைகளைத் தந்து நம்மை ஆசீர்வதிப்பாராக!

**FORM IV**

Statement about ownership and other particulars about newspaper
1. Place of publication : **Madurai**
2. Periodicity of its publication : **Monthly**
3. Printer's Name : **Sharon Print System**
Nationality : **Indian**
Address : 51/71. Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai - 625002.
4. Publisher's Name : **Thirugnanam D.**
Nationality : **Indian**
Address :**No:4-2/9 Kamalavelu Illam, Poonga Nagar 2nd Street, A.Kosakulam, Madurai- 625017.**
5. Editor's Name : **Ponnuraj G.**
Nationality: **Indian**
Address : **J.S. Cottage, First Floor, 410-B. Andal Nagar Extension Main Road, W.Velacherry, Chennai - 600042.**
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding. More than one per cent of the total capital. : **IRAI ARASU TRUST Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai - 625021.**

I, **Thirugnanam D.,** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date: 28/03/2026 Signature of Publisher

# 2026 மார்ச் மாத வேத வினாக்களுக்கு விடைகள்
## 1 கொரிந்தியர் 1-8 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. ஏக மனது – ஏக யோசனை 1:10
2. பலவீனர் – கனவீனர் 4:10
3. உபவாசம் – ஜெபம் 7:5
4. வயிறு – போஜனம் 6:13
5. துப்புரவு – உண்மை 5:8

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. அப்பொல்லோவாகிலும், உலகமாகிலும், மரணமாகிலும், வருங்காரியங்களாகிலும் 3:22
2. இறுமாப்பை, அன்போ, பக்திவிருத்தியை 8:1
3. தேவனால், ஞானமும், பரிசுத்தமும் 1:31
4. பேச்சிலே, பெலத்திலே 4:20
5. அநுபவிக்கிறவர்கள், தகாதவிதமாய், இவ்வுலகத்தின் வேஷம் 7:31

**விடை எழுதுக**

1. பொறாமை, வாக்குவாதம், பேதகங்கள் 3:3
2. கர்த்தர் 4:4
3. சிலுவையைப் பற்றிய உபதேசம் 1:18
4. தேவனில் அன்புகூருகிறவன் 8:3
5. தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரம், ஆவியினால் 6:20





# பத்து நாட்கள் பரிசோதனை!



தானியேல் வாழ்க்கை வரலாறு

நாதன்

தானியேலாகிய நானும், என் நண்பர்களாகிய அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோரும் சிறைக்கைதிகளாக, இப்போது பாபிலோனில் இருக்கிறோம். எங்களோடு இன்னும் சில வாலிபர்களும் இருந்தனர்.

எங்களைச் சிறைப்பிடித்த, கல்தேயர் என்னும் பாபிலோனியர்கள் தான், அன்றைய நாளில், உலகிலேயே அதிக வலிமை வாய்ந்தவர்கள். காரணம், அவர்களுடைய அரசனான இரண்டாம் நேபுகாத்நேச்சாரே!



பாபிலோன் வந்த சில நாட்களில், அந்த மாபெரும் நகரைச் சுற்றிப்பார்க்க, அழைத்துச் செல்லப்பட்டோம்.

எனக்கும், என் நண்பர்களுக்கும் மிகப்பெரும் அதிர்ச்சி ஒருபுறம்-வியப்பு மறுபுறம். அதிர்ச்சி வந்தது எதனால் என்றால், எங்கு பார்த்தாலும் கோயில்களும், உருவச் சிலைகளும் நகர் முழுவதும் நிறைந்திருந்தன. அவற்றை எங்களுக்குச் சுற்றிக்காட்டிய அரண்மனை அதிகாரி சிரித்துக்கொண்டே சொன்னார்: "பேரரசர் நேபுகாத்நேச்சாரின் பொழுதுபோக்கே, கட்டிடங்களும், கோயில்களும் கட்டுவதுதான்" என்றார்.

ஏராளமான சிறிய, பெரிய கோயில்கள். ஆனால், அவற்றில் இரண்டு கோயில்கள் மிகப்பெரியவை. அவர்களுக்கு இருந்த தெய்வங்களில் தலைமையான தெய்வத்தின் பெயர் "மார்டுக்" (Marduk). அந்த தெய்வத்திற்கு அரசர், ஈசாகிலா (Esagila) என்னும் முதல் கோயிலைக் கட்டினார். அதுவே பெரியதாக இருந்தது. பின்னர், நகரின் மற்றொரு பகுதியில் ஒரு மாபெரும் உயர்ந்த கோபுர அமைப்பில் இருந்த எட்டிமெனான்கி (Etimenanki) என்னும் கோயிலைக் கட்டினார். அதுவும் மார்டுக் தெய்வக்கோயிலே! நானும், என் நண்பர்களும் எங்களுக்குள் பேசிக்கொண்டோம்: "இப்படித்தான் பாபேல் கோபுரம் இருந்திருக்குமோ? "

உருவமில்லாத, ஒரு தெய்வ வணக்கம் உடைய இஸ்ரவேலராகிய எங்களுக்கு, இந்த பாபிலோனிய உருவ வழிபாடும், ஏராளமான கோயில்களும் அதிர்ச்சியைத் தந்தன.

ஆனால், அந்த மாபெரும் நகரின் அமைப்பும், கட்டிடங்களும், மற்றொரு வகையில் வியப்பைத் தந்தன. எங்களை அழைத்துச் சென்றவர் சொன்னார்: "இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் காணப்போவது உலக அதிசயங்களில் ஒன்றான "பாபிலோனிய தொங்கு தோட்டங்கள்" என்றார். உண்மையிலேயே

அந்தத் தோட்டங்கள் வியப்பைத் தந்தன.

அன்று வீடு திரும்பியவுடன், நாங்கள் நால்வரும் முழங்கால்படியிட்டு, இஸ்ரவேலின் தேவனான யெகோவாவை நோக்கி ஜெபித்தோம். இந்த உருவ வழிபாடு நிறைந்த பாபிலோனில், எங்கள் விசுவாசம் தளராமல் இருக்க மன்றாடினோம்.



கல்தேயரின் பழக்க வழக்கங்கள் எங்களுக்குக் கூறப்பட்டன. முதலில், அவர்களின் மொழி எங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது. அது மட்டுமல்ல, எங்களுடைய எபிரேயப் பெயர்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டன:

தானியேல் – பெல்தெஷாத்சார்
அனனியா – சாத்ராக்
மீஷாவேல் – மேஷாக்
அசரியா – ஆபேத்நேகோ

அரண்மனை அலுவலர்களுக்குத் தலைவராயிருந்த அஸ்பேனாசு என்பவர்தான் இதைச் செய்தார். பெயர்களை மாற்றிய அன்று, எங்களை அழைத்து, "பேரரசர் நேபுகாத்நேச்சார் உண்ணும் அதே உணவும், திராட்சை இரசமும் உங்களுக்குக் கொடுக்கப்படும். மூன்று ஆண்டுகள் பயிற்சிக்குப்பின் நீங்கள் அரசர் முன்பாக நிற்பீர்கள்" என்றார்.

எங்கள் நால்வரைத் தவிர, மற்றவர்களுக்கு இது மிகவும் மகிழ்ச்சி தந்த செய்தியாக இருந்தது. கைதட்டி வரவேற்றனர். ஆனால், எங்களுக்கோ இது ஒரு வகையில் துயரச்செய்தியாக இருந்தது. அரசரின் உணவு சிறந்ததுதான். ஆனால், அது அவர்களுடைய தெய்வங்களுக்கு முன்னால் படைக்கப்பட்டது. அந்த உணவும், திராட்சை இரசமும் எங்களைத் தீட்டுப்படுத்தும். இதை எப்படித் தடுப்பது?

அஸ்பேனாசு என்னும் தலைவரிடம், இதை எடுத்துச்சொன்னேன். அவர் எப்போதும் என்னை அன்பாக நடத்துவார்.
அவர் சொன்னார்: "அரசரின் உணவைச் சாப்பிடும் மற்ற வாலிபரை விட, உங்கள் முகங்கள் வாடிப்போனால், அரசர் என் தலையை வாங்கிவிடுவாரே. அதற்கு நான் பயப்படுகிறேன். எதற்கும் உங்களுக்கு உணவு கொடுக்கும் மேல்ஷார் என்பவரிடம் பேசிப்பாருங்கள்" என்றார்.

மேல்ஷாரிடம் சென்றோம். அவரும் அன்பான மனிதர். அவரிடம் நான் பேசினேன்: "ஐயா, ஒரு பத்து நாட்கள் எங்களுக்கு அரசரின் உணவு வேண்டாம். சாதாரணமான பருப்பு முதலிய மரக்கறி உணவையும், திராட்சை இரசத்திற்குப் பதிலாக தண்ணீரையும் கொடுங்கள். பின்னர், எங்களையும் மற்றவர்களையும் ஒப்பிட்டுப்பாருங்கள்" என்றேன். மனதிலே ஒரு ஜெபமும் செய்தேன். தேவன் மேல்ஷாரை இதற்கு இணங்கச் செய்தார்.

பத்து நாட்கள் சென்றன. பரிசோதனை முடிந்தது. மேல்ஷார் எல்லா வாலிபர்களையும் வரிசையில் நிற்க வைத்து, எங்கள் உடலையும், முகங்களையும் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தார். அரசனது சிறப்பு உணவைச் சாப்பிட்டவர்களை விட, எங்களுடைய தோற்றமும், முகங்களும் களையுள்ளதாக (அழகானதாக) இருந்தன. எங்களின் உடல்கட்டு செழுமையுள்ளதாகக் காணப்பட்டது.



மேல்ஷாருக்கு அது மிகுந்த வியப்பைத் தந்தது. நாங்கள் வேண்டிக்கொண்டதின்படியே சிறப்பு உணவு எங்களுக்குத் தவிர்க்கப்பட்டது. மரக்கறி உணவே தொடர்ந்து கிடைத்தது.

பத்து நாட்கள் பரிசோதனையில், நாங்கள் வெற்றிபெற தேவாதி தேவன் உதவி செய்தார். அரசனின் உணவாலும், திராட்சை இரசத்தாலும், தீட்டுப்படாமல் காப்பாற்றினார். எங்கள் ஜெபங்களைக் கேட்டார். அவருக்கு நன்றி.

எங்கள் முன்னோர்கள் 40 ஆண்டுகள் வெறும் மன்னாவினாலும், கற்பாறைகளில் இருந்து வந்த தண்ணீராலும் காப்பாற்றப்பட்டது என் நினைவில் வந்தது.

தாவீதின் சங்கீத வசனங்களும் மனதில் வந்தன: "உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்... அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்." (சங்கீதம் 91:11-12, 14)

நாங்கள் நால்வரும் ஒவ்வொரு இரவும் ஜெபிக்கத் தவறவில்லை.

ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருந்த இஸ்ரவேலின் கர்த்தர், எங்களோடு இருக்கிறார். அவர் எங்களுக்கு, மற்றவர்களைக் காட்டிலும், எல்லாவித எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்திருக்கிறார்.

தானியேலாகிய எனக்கு (சிறப்பான முறையிலே) சகல தரிசனங்களையும், கனவுகளையும் உய்த்துணரும் ஆற்றலையும் அருளியுள்ளார்.

நாட்களும் வாரங்களும் கடந்தன.

**அடுத்த இதழில் சந்திப்போம்....**

**பேசும் வார்த்தைக்கும், வாழ்க்கையின் செயல்பாடுக்கும் வித்தியாசம் இருக்காமல் வாழும் மனிதன் கடவுள் கரங்களில் வலிமையான ஆயுதமாக செயல்படுவான்,**

# துதித்து மன்றாடுவோம்




ஏப்ரல்-1

## தமிழ்நாடு

### கள்ளக்குறிச்சி மாவட்டம்

**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி பணி செய்யப்பட்ட மேல்வென்னியூர், செங்கப்பாடி, எருக்கம்பட்டு, வெள்ளிமலை, பாச்சேரி, கென்டிக்கல், கொட்டபுத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட லோகேஷ், திருப்பதி, சடையன், முகேஷ், ஆண்டி, மஞ்சுளா, காமாட்சி ஆகியோருக்காக, ஜெயாவுக்கு கிடைத்த பெண் குழந்தைக்காக, கர்நாடகா மாநிலத்தில் வேலைக்கு சென்ற சபை குடும்பங்கள் மீண்டும் பாதுகாப்பாக திரும்பியதற்காகத் துதிப்போம். விஜய் பூபதிக்கு (2 1/2 வயது குழந்தை) நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

### கடலூர் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, மனோ மனைவிக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காக, ஊழியரின் மனைவிக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட காமாட்சி, அம்சவல்லி, சரவணன், அன்பு நிலா, மஞ்சு, கொளஞ்சி, இந்திரா, வானதி, வெண்ணிலா, அலமேலு, கிஷோர், வசந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, சுமித்ராவுக்கு அரசு வேலை கிடைக்க, அஜித் குமார், ரமேஷ் பாபு ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, சாம் வீட்டிற்கு புதிய மின் இணைப்பு கிடைத்ததற்காக, அறிவழகி மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட மதுமிதா, சுசில், திருமாறன், பிரகாஷ் ராஜ், அகிலன், மச்சகாந்தன் ஆகியோர் இரட்சிக்கப்பட, பிரிந்துபோன அனிதா குடும்பம் இணைந்திட, அஞ்சுகத்திற்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### ஈரோடு மாவட்டம்

ஏப்ரல் -2

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, குருவை ஆகிய கிராமங்களுக்காக, ரமேஷ், லட்சுமி, சபரி ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, சண்முகம், பிரியா, பிரியங்கா ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காகத் துதிப்போம். சண்முகம் குடும்பம் இரட்சிக்கப்பட, மாசிலாபாளையம் பகுதியில் புதிதாக ஜெபக்குழு ஆரம்பிக்க இடம் கிடைக்க, சித்ரா இரத்தக்குறைவு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப் பாளையத்திற்காக, கருப்பாயம்மாள் உயர் இரத்த அழுத்த நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, மாதேஷ் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்கிறதற்காகத் துதிப்போம். மாதேஷ், சரஸ்வதி ஆகியோர் விசுவாசத்தில் உறுதியாக இருக்க, கருப்பாயம்மாள், ராஜன், மருதாச்சலம், பெரியசாமி, சுரேஷ் ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொள்ள, கேசவனின் விவசாய நிலத்தில் நல்ல வருமானம் கிடைக்க, கஸ்தூரி (கல்லூரி இறுதி ஆண்டு), 10 மற்றும் 12 ஆவது தேர்வு எழுதியுள்ள மாணவ மாணவிகள் அதிக மதிப்பெண்கள் பெற, லீதியாள் அறுவை சிகிச்சைக்கு பின் நிறைவான சுகம் பெற, சபை மக்கள் ஜெபக்குழு, சீசத்துவப் பயிற்சி, சிறுவர், வாலிபர் கூடுகைகளில் உற்சாகமாய் கலந்து கொள்ள, ஊழியங்களைத் தாங்குகிறவர்கள், அருட்பணியாளர்கள் எழும்ப ஜெபிப்போம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**திரு. லூர்டஸ்- திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னாம்பாளையம், பூவளபருத்தி, குள்ளேகவுண்டனூர், பொன்னாச்சியூர், உப்பிலியனூர், சமத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, நவீன், செல்வகுமார், சிவகாமி, முகைதீன், சௌமியா, சதீஷ் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, டேனியல் புதிய வீடு வாங்கியதற்காக, பிரசாந்த், ஜெபபாக்கியம் ஆகியோர் நிறைவான சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் ஆராதனையில் கலந்து கொள்ள, சாரா இடது கால் எலும்பு முறிவிலிருந்து சுகம் பெற, கிரீட்டா, ஜான்சிராணி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சிம்சோன் இருதய நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, சபையின் குடும்பங்களில் காணப்படும் குழப்பங்கள் மறைய-சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:** **(ஏப்ரல்-3)**
**திரு.எபிநேசர் உவைட்-திருமதி. மேரி**

பிரேம்குமாருக்கு தேவன் கொடுத்த வேலைக்காகத் துதிப்போம். மணியன், ஜெயக்குமார், சீனிவாசன், வேலுசாமி குடும்பம் இரட்சிக்கப்பட, பின்மாற்றத்தில் உள்ள அன்பு, காளிமுத்து, தீனா ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, கிருபை, ஆபிரகாம் ஆகியோர் நிறைவான சுகம் பெற, அற்புதமேரி சர்க்கரை நோயினால் ஏற்பட்ட புண்ணிலிருந்து நிறைவான சுகம் பெற, ஜெயம்மாள் வீடு கட்டுமான பணியின் தேவைகள் சந்திக்கப்படஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையத்திற்காக, செல்வி சுகம் பெற்றதற்காக-அவருக்கு வர வேண்டிய பணம் வந்து சேர்ந்ததற்காக, திவ்யா, தாயம்மா ஆகியோர் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக. பிரபு, விஜயலட்சுமி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். லீதியாள், ரூபி, ஜோஸ்வா ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, சந்தோஷ் மனநோயிலிருந்து சுகம் பெற, தங்கவேல், சாந்தி ஆகியோர் விசுவாசத்தில் உறுதிப்பட,

ஆலயத்தைச் சுற்றி மதில் சுவர் கட்டப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வாழைக்கொம்பு நாகூர், புது காலனி, மீனாட்சிபுரம், பொள்ளாச்சி, சஞ்சய் கவுண்டர் புதூர், அம்பராம்பாளையம் ஆகிய பகுதிகளுக்காக, உமா, மகேஸ்வரி, மணிகண்டன், கவி ஸ்ரீ, கவிநயா, சுகன்யா, பானு, பாக்கியம், சுமதி, தங்கம்மாள் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, புது காலனியில் சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டதற்காக, திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக உள்ள நடராஜ், கன்னீஸ்வரி, ராணி, சுவாதி ஆகியோருக்காக, கலா, ராஜன், ராணி, வேல்முருகன் ஆகியோர் ஆராதனையில் புதிதாக கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ரமேஷ், ராமகிருஷ்ணன், பிரசாந்த், ராஜ்குமார், பாலாமணி, பால்ராஜ், லத்திகா, நிதர்சன் ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

ஏப்ரல்-4

**அருட்பணியாளர்:**
**திரு. S. பால்ராஜ் -திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி, பிச்சைக்கல்பட்டி, சின்னமருதூர், உப்புக்கரை ஆகிய கிராமங்களுக்காக, அற்புதம் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, தேன்மொழி ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சந்தீப், மதுமிதா, ஸ்மித்தின், விவினா ஆகியோர் 10 மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் எடுக்க, டைட்டஸ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற–மனந்திரும்ப, ஆபிரகாம் பக்கவாத நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, தமிழ்ச்செல்வி, சரஸ்வதி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, மகா, ஜீவா ஆகியோர் வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட சித்ரா, ஹரிஸ், கருணாநிதி, செல்லம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட, சண்முகம் (மூளை இரத்தக்குழாய் அடைப்பு), வள்ளியம்மா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

ஆலய ஆண்டுவிழா, பெண்கள் முகாம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றதற்காக, பாக்கியா (முதுகு தண்டுவட நோய்) அறுவைச் சிகிச்சையின்றி சுகம் பெற்றதற்காக, கன்னியம்மாள் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, சந்திரன், ஈஸ்வரன், மிஸ்பா, மஞ்சுளா ஆகியோர் வீடு கட்டி முடித்ததற்காக, முருகன், செல்வராஜ், சின்னு குமாரன், சின்னாள், தமிழா, தாரணி ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட கருப்பன், அன்னம்மாள், கமலா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, கோபால்–காயத்ரி தம்பதியினர் மீண்டும் சேர்ந்து வாழ,

சங்கீதா மூளைக்கட்டி நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, முருகேசன், செல்வன், வீரா, செல்லத்துரை, ராணி ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**ஏப்ரல்-5**

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.J.P.ரவிக்குமார்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட ஜனங்களுக்காகத் துதிப்போம். பின்வாங்கி போனவர்கள் திரும்பவும் ஆராதனையில் கலந்து கொள்ள, பொது தேர்வு எழுதியிருக்கும் பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் பெற, சிறுவர் மற்றும் வாலிபர்கள் ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற, ஊழியர் வீடு கட்டுமானப் பணிகள் நிறைவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழ்குறிச்சி, தெற்குத் தெரு, கீழக்கண்டார் கோட்டை ஆகிய பகுதிகளுக்காக, சுருதிகா, ராஜா–பிரியா குடும்பத்தினர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, ரவி–முத்து ஆகியோருக்கு ரயில்வேயில் வேலை கிடைத்ததற்காக, பிங்கி (கால் வீக்கம்,மன நோய், தைராய்டு) நிறைவான சுகம் பெற, ஸ்வேதாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, நிவேதாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டு வேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்டு ஆராதனையில் கலந்து கொண்ட அழகு ராணி குடும்பத்திற்காக, அழகு ராணி மகளுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட வளர்மதி, கலைவாணி, ஜெயா, ஃபெமினா, ஜெயமணி, காமாயி, சரசு J, சரசு S, நித்தியா, பிரியா, சக்திவேல் குடும்பம், பாண்டி, பாண்டியம்மாள், மீனாட்சி, ஆஷா, முத்து, பாண்டியம்மாள், மரகதம், முத்தையா, ராஜேஸ்வரி குடும்பம், வேதா குடும்பம், அழகு ராணி குடும்பம் இரட்சிக்கப்பட, பவுலுக்கு திருமணம் நடைபெற, ஆலய இடப்பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. S. சாமுவேல்–திருமதி. ரோகிணி**

புதிதாக நற்செய்தி கேட்ட ஜான்சிராணி, ஜான்சன், பூவாயி, முருகேசன், ராணி ஆகியோருக்காக, வினோத் விபத்தினால் ஏற்பட்ட காயங்களிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட குலசேகரன் கோட்டை பகுதியில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ரெபேக்கா கர்ப்பப்பை புற்று நோயிலிருந்து சுகம் பெற, பார்த்திபன், நதியா, பிரியா, அங்கயற்கண்ணி ஆகியோர் விரைவில் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**ஏப்ரல்-6**

**அருட்பணியாளர் :**

**திரு. பிரவீன்குமார்–திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அரசப்பட்டி, வெயிலுகந்தபுரம், காமாட்சிபுரம், குளத்துவாய்ப்பட்டி, சமத்துவபுரம், வலையங்குளம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராஜாமணி, பாண்டியம்மாள், மாரியம்மாள், மகாலிங்கம், செல்லாள், லட்சுமி, சிவராஜ், ராமலட்சுமி, மாரி ஆகியோருக்காக, கருப்புவின் வீடு முழுமையாக கட்டி

முடிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஜேம்ஸ் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, அறுவைச்சிகிச்சை செய்யப்பட்ட மணிமேகலையின் தந்தைக்கு நிறைவான சுகம் கிடைக்க, மதன்குமார் மனநோயிலிருந்து சுகம் பெற, மணிமேகலையின் மகன் கருப்புவுக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஊழியரின் மனைவிக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. M. கார்த்தி-திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, புதுப்பட்டி, பூசலபுரம், ஜம்பலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, நாகலட்சுமிக்கு கிடைத்த அரசு வேலைக்காக, ஜெனிபருக்கு செவிலியர் கல்லூரியில் இடம் கிடைத்ததற்காக-தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக, ஜோசுவா இருசக்கர வாகனம் வாங்கியதற்காக, சுப்பிரமணி, தங்கம், ஸ்டீபன், காலேப், பச்சி ராஜா, ஆமோஸ் ஆகியோரின் வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பெரியசாமி, நர்மதா, முத்துலட்சுமி ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, திருச்சபையில் உள்ள குடும்பங்கள் ஒற்றுமையோடு செயல்பட, போதகர் வீடு கட்டுமான பணித் தேவைகள் சந்திக்கப்பட, டேனியல், இம்மானுவேல், அபி, எரேமியா ஆகியோர் விரைவில் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. A. கந்தசாமி-திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி கேட்ட சிவா, பிரேமா, புஷ்பா, கிருஷ்ணன், வசந்தி, வேலுச்சாமி, கார்த்திகா, சித்ராதேவி ஆகியோருக்காக, டெய்சிக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக, அசோக் இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சூர்யா தேவி நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக, பகவான் தாஸ் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம், சூர்யா தேவி, நர்மதா, முனுசாமி குடும்பங்கள் இரட்சிக்கப்பட, அசோக் வீட்டின் கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய-தேவைகள் சந்திக்கப்பட, பாப்பாத்தி, கார்த்திக் மனைவி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

ஏப்ரல்-7

**அருட்பணியாளர் :**

**திரு. P. சத்தியநாதன்-திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடாசலபுரம், குச்சம்பட்டி, கோபாலபுரம், ரெட்ரப்பட்டி, வையூர், முத்துலிங்காபுரம் ஆகிய கிராமங்களுக்காக, ஜெயபாரதி கல்லூரி படிப்பை முடித்ததற்காக, மேரி, காந்திமதி, காளியம்மாள், துரைராஜ் ஆகியோரின் நிலத்தில் நல்ல அறுவடை கிடைத்ததற்காக, சாந்தகுமாரிக்கு மருத்துவமனையில் வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். காவ்யப்பிரியா, ஸ்ரீமதி, கௌதம் ஆகியோர் ப்ளஸ் டூ தேர்வில் அதிக மதிப்பெண் பெற, டேவிட், தவசி ஆகியோரின் வீடு கட்டி முடிக்கப்பட, ஜனனிக்கு மேற்படிப்பு படிக்க ஏற்ற கல்லூரி கிடைக்க, காளியம்மாள் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, பீட்டர் சாம் ஆராதனையில் கலந்து கொள்ளஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. P. ராஜா-திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல், மொட்டைப்பாறை, காந்தி நகர், எம்ஜிஆர் காலனி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பத்மா, சிவசாஷா, சுந்தரவல்லி, முருகேசன், கருப்பன், பாண்டி, கலைச்செல்வி ஆகியோருக்காகத்

துதிப்போம். முத்துப்பாண்டி தடையின்றி ஆராதனையில் கலந்து கொள்ள, பாண்டி இரட்சிக்கப்பட, 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. காளிமுத்து-திருமதி. குமுதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்காமநல்லூர், சிவநாதபுரம், ஓணாம்பட்டி, காளப்பம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, பெருங்காமநல்லூரில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்திற்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் சிவனம்மாள், குருவம்மாள் ஆகியோருக்காகத் துதிப்போம். மே மாதத்தில் நடைபெறும் VBS ஆசீர்வாதமாக நடைபெற, குருவம்மாள் இரட்சிக்கப்பட- தீய கனவுகளிலிருந்து விடுதலை பெற, பாண்டீஸ்வரி ஆவிக்குரிய மறுமலர்ச்சி அடைய-கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, அபினேஷ், அபிலாஷ் ஆகியோருக்கு வேலை கிடைக்க, பாண்டி ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**ஏப்ரல்-8**

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜோதிமாணிக்கம், கொடிக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, முத்துக்கனி, ஜெரால்டு ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, மார்த்தாள் மாயக்காள் வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கௌரி, ஆனந்த், செல்வி, சுமதி ஆகியோருக்காகத் துதிப்போம். கோதாவரி, கௌரி ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, செல்வி மகனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, செல்வகுமாரை இழந்த குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் தர, 10 மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவ மாணவிகள் அதிக மதிப்பெண்கள் எடுக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**திரு. M. அகஸ்டின்-திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, மணல்பட்டி, சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, முகிலனுக்கு கிடைத்த வேலைக்காக, சீனியம்மாள் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, மகிமாவுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். திவ்யா செல்வி, அன்பு (வயிற்று வலி- கால் வேதனை) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சாம்பட்டி, கொப்பிலிப்பட்டி, அப்பனம்பட்டி, திம்மநத்தம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சத்தியா, மாயக்கா, மொக்கதுரை ஆகியோருக்காக, தேவி விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, தேவதையின் அம்மாவுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சுபாஷ், அருணா ஆகியோருக்கு நிரந்தர வேலை கிடைக்க, ஜெயச்சந்திரனுக்கு சொந்தமான இடம் விற்கப்பட, கல்லறைத் தோட்டத்திற்கு இடம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஏப்ரல்-9**

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திப்பட்டி, வகுரணி, நடுப்பட்டி ஆகிய

**கிராமங்களுக்காக,** சேரன் அறுவை சிகிச்சையின்றி சுகம் பெற்றதற்காக, தடை நீங்கி ராமாயி ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, கனகராஜ் மேல் நெல் மூட்டை விழுந்தும் சேதம் இல்லாமல் தேவன் காத்ததற்காக, அமுதாவிற்கு வேலை கிடைத்ததற்காக, ஆனந்தகுமார் விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காக, சினேகாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, பிரபாகரனின் மகளுக்கு அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, முருகேசன் ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் சுப்பம்மாள், புஷ்பம், விஜயலட்சுமி, கலையரசன், கமலக்கண்ணன், சோலை, அருணா, கண்ணுச்சாமி, சிநேகா ஆகியோர் இரட்சிக்கப்பட, சுப்புத்தாய், காந்தியம்மாள், புஷ்பம், ரவி ஆகியோர் மாலைக்கண் நோயிலிருந்து சுகம் பெற, சந்திரா தேவி, கமலக்கண்ணன், அர்ச்சனா தேவி ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஐஸ்வர்யா, சரண்யா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. A. பால்ராஜ்–திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, கப்பலூர், அகதிகள் முகாம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட காளியம்மள், முத்துக்குமார், முத்துராமன், சுப்பிரமணியம், நித்தியா, ரம்யா சுந்தரலிங்கம், சாரதா ஆகியோருக்காக, சாம் மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, சுபா பாலன் குடும்பம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக–ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, புதிதாக ஆலயம் வந்த முத்துராமன், முத்துக்குமார் ஆகியோருக்காகத் துதிப்போம். சாரதா–சுந்தரலிங்கம் குடும்பமாக இரட்சிக்கப்பட, காளியம்மாள் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற–குடும்பமாக இரட்சிக்கப்பட, முத்துக்குமார், முத்துராமன் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. G. ஜெகன்–திருமதி. திவ்யா**

புதிதாக நற்செய்தி கேட்ட வேதமுத்து, அறிவழகன் ஆகியோருக்காக, ஏஞ்சல் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட அறிவழகன், பன்னீர்செல்வம், கோமதி, முத்துமாரி, செல்வநாயகி, முத்துச்செல்வம், வேதமுத்து ஆகியோர் குடும்பமாக இரட்சிக்கப்பட, அன்னலட்சுமி, பால்ராஜ், ஜெயக்கொடி, வள்ளி, பாக்கியசாமி, ஸ்டெல்லா மேரி ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, பிரகாஷ் (29 வயது) மனநோயிலிருந்து சுகம் பெற–இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஏப்ரல்-10**

**அருட்பணியாளர் :**

**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

நற்செய்தி கூட்டங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக–கலந்து கொண்ட 80 பேருக்காக, முழு நேர ஊழியத்திற்கு ஒப்புகொடுத்த விமலுக்காக, சுந்தரி, சாந்தா மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஞானம் நகர், சம்பக்குடி, வடிவேல்கரை, சக்தி நகர், லாலா சத்திரம், சாய் கார்டன், ஏற்குடி, காந்தி நகர் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். அரசு பொதுத்தேர்வு எழுதிய

சந்தோஷ், ஞானலீலா, மகிமா, விசாலினி, கீர்த்திகா ஆகியோர் அதிக மதிப்பெண்கள் எடுக்க, சேகர், செல்லராஜா, கண்ணன் ஆகியோர் இரட்சிக்கப்பட, நித்திக், பிரகாஷ், ஜெஸ்ஸித் ஆகியோர் விசுவாசத்தில் வளர, இராஜேஸ்வரி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. பிலிப் முருகன்–திருமதி. அனிதா**

கொடிமாலா அவர்களின் வீடு அர்ப்பணிப்பு செய்யப்பட, பூவிதா, ஷியாம் ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, சத்யா கணவர் இரட்சிக்கப்பட–குழந்தை பாக்கியம் கிடைக்க, சிந்தியா கணவர் இரட்சிக்கப்பட–இரண்டு பிள்ளைகளின் சுகத்திற்காக, ஆகாஷ்–பிரவீனா தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க–நிலப்பிரச்சினை நீங்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. வயநாட்டுமுத்து–திருமதி. கனியமுது**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொரிக்காம்பட்டி கிராமத்திற்காகத் துதிப்போம். மே மாதம் நடைபெறவுள்ள சிறுவர் ஊழியத்திற்காக–ஆசிரியர்களுக்காக, சாமுவேல், சாந்தகுமாரி, சீதா ஆகியோருக்கு நிரந்தரமான வேலை கிடைக்க–ஏற்ற காலத்தில் திருமணம் நடைபெற, கனகா, முத்துலட்சுமி, பாண்டிச்செல்வி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஏப்ரல்-11**

**அருட்பணியாளர் :**

**திரு. J. ஜெயகுமார்–திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளபாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, ஊழியர் மனைவி கனிக்கு நல்ல முறையில் ஆபரேஷன் நடைபெற்றதற்காக, சபை மக்கள் ஊழியத்திற்கு உதவியாக இருப்பதற்காகத் துதிப்போம் . நற்செய்தி கேட்ட தினேஷ், ஜெகதீஷ், மீனாட்சி, நவீன், முகிலன், ஆகாஷ், அஸ்வின், கௌசிகா, அருண், மீனா, பேரரசு, முத்துராமன், சாந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட–திருமுழுக்கு பெற, கனிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. P. தேவதாஸ்–திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, அழகாபுரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட கணேசன், நாகலட்சுமி ஆகியோருக்காகத் துதிப்போம். வீரவேலுக்கு அரசாங்க வேலை கிடைக்க, பூபதி அம்மாள் பென்ஷன் தடையின்றி கிடைக்க, காணாமல் போன மூன்று இலட்சம் திரும்ப முருகனுக்கு கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்–திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கண்டமனூர், பொன்னம்மாள்பட்டி, தேக்கம்பட்டி, அடைக்கம்பட்டி, டீ.மீனாட்சிபுரம் ஆகிய கிராமங்களுக்காக, நித்யாவுக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காக, கீதாவுக்கு கர்ப்பப்பைக்கட்டி அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஜெஸினா வெரிகோஸ் நரம்பு நோயிலிருந்து சுகம் பெற, செல்வேந்திரன் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ஹரிவரனுக்கு திருமணம் நடைபெற, அம்பிகாவின் பிள்ளைகள் இரட்சிக்கப்பட

ஜெபிப்போம்.

ஏப்ரல்-12

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, கிருபாவுக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காக, விக்டோரியா குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, குமரேசனுக்கு கிடைத்த சுகத்திற்காக, அனிதாவுக்கு திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட பிரகாஷ், தினேஷ், காட்டு ராஜா, ஹரிஹரன், ஜீவா, சிவமுருகன், மாரிசாமி, புவனேஷ்குமார், ஈஸ்வரி, தனம், கலைச்செல்வி, முத்துலட்சுமி, இந்துமதி, பார்த்தசாரதி, முருகன், தங்கபாப்பா, பார்வதி, ஈஸ்வரன், காந்திமதி, அழகு சுந்தரம், பழனிச்சாமி, பஞ்சவர்ணம் ஆகியோர் இரட்சிக்கப்பட, காந்திமதி தலையில் உள்ள கட்டியிலிருந்து சுகம் பெற, முருகன், முத்துலட்சுமி, காயத்ரி, காந்திமதி, பார்வதி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, பஞ்சவர்ணம் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, மாதேசுக்கு அரசு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**

**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால் ஆகிய கிராமங்களுக்காக, பாண்டி மீனா பிளஸ் தேர்வில் எழுபது விழுக்காடு மதிப்பெண் எடுத்ததற்காக, புதிதாக ஆலயத்துக்கு வந்த காவ்யா, விஷ்வா ஆகியோருக்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் நற்செய்தி கேட்ட நபர்களுக்காகத் துதிப்போம். இந்த வருடம் புதிதாக 10 குடும்பங்கள் திருச்சபைக்கு வர, குருவம்மா குடும்பம், சுகன்யா குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மணலூர், பெருமத்தூர், கோயிலாகுளம், கரிவலம்வந்தநல்லூர், குவலக்கண்ணி, பச்சேரி ஆகிய பகுதிகளுக்காக, லதா (வயிற்றுக் கட்டி) நிறைவான சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். முனியசாமி, கோபால் ஆகியோர் இரட்சிக்கப்பட, முத்துக்குமாரசாமிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**கரூர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. J. பவுல்ராஜ்– திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சேங்கலாபுரம், கீழ் பசுபதிபாளையம், செல்லப்பாளையம், பழமாபுரம், வெள்ளாளப்பட்டி, ஆத்தூர், பஞ்சமாதேவி ஆகிய கிராமங்களுக்காக, குப்பம் கிராமத்தில் புதிதாக சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டதற்காக, 12 வருடம் கழித்து சங்கீதாவுக்கு தேவன் ஆண் குழந்தை கொடுத்ததற்காக, கீர்த்தனாவிற்கு தேவன் கொடுத்த குழந்தை பாக்கியத்திற்காகத் துதிப்போம். கரண்குமார்–விசாலாட்சி, சௌமியா–சார்லஸ், ராஜ்குமார்–சௌமியா ஆகிய தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ரமேசுக்கு விரைவில் திருமணம் நடைபெற, பிரின்சிக்கு வேலை கிடைக்க, தினேஷ் மனைவிக்கு, அபிநயா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, பொன்ராஜ், ரம்யா ஆகியோருக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் :** (ஏப்ரல்-13)

**திரு.D. தங்கராஜ்-திருமதி. எஸ்தர் பிரியா**

ஜெனிபருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காக, அனுஷ்கா சுகம்பெற்றதற்காக, வசந்தியம்மாள் இருதயவலியிலிருந்து சுகம்பெற்றதற்காக, அந்தோணிசாமி குடும்பம், பார்வதி குடும்பம் சமாதானம் பெற்றதற்காகத் துதிப்போம். சுருதி, கோபிகா, உமா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சந்திர சேகர், யேசுதாஷ், ஆரோக்கியதாஸ், ரமேஷ், ராமலிங்கம், சசி, ஆனந்த், ராஜேஸ், கிருஷ்ணன், வெங்கடேஷ், தேவராஜ், அலெக்ஸ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ப்ளஸ்சி, விக்னேஷ், அதிசயா, க்ளமண்ட் (பத்தாம் வகுப்பு), ஆகாஷ், ஜெனட், மது (பன்னிரண்டாம் வகுப்பு) ஆகியோர் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற, ஐஸ்வர்யா-கிருஷ்ண ராஜ் தம்பதியினர் மீண்டும் சேர்ந்து வாழ, தமிழ்செல்விக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங் கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு. T.S. தெங்கோலுன் ஹோகிப் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

வடஇந்திய அருட்பணியாளர்களுக்கான சிறப்புக்கூட்டம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மொழிபெயர்ப்புப் பணி** (ஏப்ரல்-14)

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி “ஆடியோ

வேதாகமம்", தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

வளரும் விண்ணரசு

அனைத்து தரப்பினரும் வாசிக்கும்படி, இதழ் மெருகேற்றம் செய்யப்பட, ஜெபக்குறிப்புகளுக்கு ஏற்ற சமயத்தில் பதில் கிடைக்க, கட்டுரைகள் எழுதுவோர் சரியான நேரத்தில் எழுதிக் கொடுக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட, புதுமையான முறையில் இதழ் வெளியிடப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-15

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 18 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**
**திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், பட்சேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, பாய் முட்கி சுகம் பெற்றதற்காக–இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ரீட்டா, ராஜேஷ் ஆகியோர் சுகம் பெற்றதற்காக– ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். கோகுல் பாய், அர்ஜுன், ஜிதேந்திரா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, தாரா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**மாபெரும் கட்டளை என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு தெரிவு அல்ல; அது கீழ்ப்படிய வேண்டிய ஒரு கட்டளை**

ஹட்சன் டெய்லர்

## ICGM வங்கி கணக்கு விபரங்கள்

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

ஆலயக் கட்டிட நிதிக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 1 1 1 9 4 4 5 4 5 3 1
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : S B I N 0 0 0 1 4 7 9

பத்திரிக்கை ஊழியத்திற்காக

Account Name : IRAI ARASU TRUST
Account Number: 1 0 1 4 3 1 3 6 7 6 2
Bank : State Bank of India
Branch Name : M.K. University, Palkalai Nagar.
IFSC Code : S B I N 0 0 0 2 2 3 5

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, SMS மூலமாகவோ/ Whatsapp மூலமாகவோ 94459 24440 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி. மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.

**வளரும் விண்ணரசுவுக்கு சந்தா செலுத்தி பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்**

**வட இந்தியா** ஏப்ரல்-16

**அருட்பணியாளர்கள்:**
**திரு. லல்துராம் சலாம்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, லச்சன் சலாம் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். கஷ்னு காவ்டே இரட்சிக்கப்பட, மத தீவிரவாதிகளால் நற்செய்தி அறிவிக்கும் பணி தடைபடாமலிருக்க, ரஞ்சிதா சலாமுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காக, கீதா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, சீதா, லட்சுமி பொட்டாய் ஆகியோருக்குக் கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காகத் துதிப்போம். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-17

**அருட்பணியாளர்:**
**திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, ரனோதி, ரெனி ஆகியோர் சுகம் பெற்றதற்காக, ஜாரோ பாம்புக் கடியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சுனிதா, பிர் மனாயா, பாங்கி பான், சோனு, பூல்மதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, தஸ்யா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, விஷால் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால் ஆகிய கிராமங்களுக்காக, பூல்தாய் மண்டாவி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஊழியர் மீது போடப்பட்ட வழக்கு முடித்து வைக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஜான்கி, பவன்பதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, லகண்டியின் காணாமல் போன மாடு கிடைத்ததற்காகத் துதிப்போம். முனீஸ்வரி, பர்சகுமாரி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-18

**அருட்பணியாளர்:**
**திரு. புத்சிங் வட்டே–**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய கிராமங்களுக்காக, ராமு – சுக்லி ஆகியோருக்கு திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். சுக்ரு பொட்டாய்க்கு நிறைவான சுகம் கிடைக்க, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ<sup></sup>குல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங் களுக்காக, ஜெய்னி கருங்கா, ராமி கொர்மா ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மணிராம்

யாதவ் (இருதய நோய்), ரெய்மதி (தலை வலி) ஆகியோர் நிறைவான சுகம் பெற, ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. தஸ்ரு பொட்டாய்–**
**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி, பூஜாவாகி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். கோட்லி கிராமத்தில் ஒற்றுமை உண்டாக, நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாந்தாகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, ரம்யா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, சுகவீனமாக உள்ளவர்களுக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு.தேசிராம் வட்டே–**
**திருமதி. ரானோ வட்டே**

**ஏப்ரல்-19**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார், பல்போட்பாரா, ஜோட்டா பாரா ஆகிய கிராமங்களுக்காக, ராம்லால் பொட்டாய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ரஜேதி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராம்தாய் பொட்டாய், மனே பொட்டாய், சுக்கி மாட்ரா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஜக்நாத்குமிட்டி–**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காக, பாகென நுரெட்டி சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். கண்டி நுரெட்டி, சந்தீப் கருங்கா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஸ்ரேயா ரியாஸ் வாய் பேச, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**
**திருமதி. புல்தாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, ஊழியர் மீது 2023இல் தொடரப்பட்ட பொய் வழக்கு முடித்து வைக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ரமியாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, பிரதிக்யா போபால் நிறைவான சுகம் பெற நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி, மாலிங்நார் ஆகிய கிராமங்களுக்காக, ஜோக்ரு வாடே, ராம்தாய் ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். மரக்கபேடாவில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, மரக்கபேடா விசுவாசிகள் ஒற்றுமையோடு வாழ ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**
**செல்வி. சொகாய் கருங்கா**

**ஏப்ரல்-20**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர், கொர்ரா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காக, சுமித்ரா விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மம்தா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மகேந்திரா (பக்கவாதம்), மகேஷ் (மனநோய்) ஆகியோருக்க நிறைவான சுகம் கிடைக்க, தீம்பால் செவிலியர் தேர்வில் வெற்றி பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**

**ஏப்ரல்-21** **திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர், கரஞ்சிபாடா ஆகிய கிராமங்களுக்காக, பாலே சாஹேப் சுகம் பெற்றதற்காக, பால்சாய் வாடே காவலராக தேர்ச்சி பெற்றதற்காகத் துதிப்போம். மனாகு சலாம், பிரகாஷ் சலாம் ஆகியோர் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ரூத், ராகேல், ராணி, அபர்ணா ஆகியோர் தேர்வில் வெற்றி பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, அஸ்மான் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காகத் துதிப்போம். புத்னிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, உபவாச ஜெபம், வீட்டுக் கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மான்சிங் கச்லாம்**
**திருமதி. சுல்மதி கச்லாம்**

**ஏப்ரல்-22**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட படே ஜம்ரி, கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால், மட்மனார் ஆகிய கிராமங்களுக்காக, மங்கள் பொட்டாய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சுக்ராம் பொட்டாய், நிகில் கச்லாம், ஊழியர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சரிதா பொட்டாய் விசுவாசத்தில் வளர, ராம்லால் துக்கா, சந்த்நாத் படி, மங்கள் பொட்டாய், நரேஷ் பொட்டாய், சுக்தேவ் குமிட்டி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சுக்தேவ் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோர்நர், தெலங்கா ஆகிய பகுதிகளுக்காக, பஜ்நாத் பொட்டாய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சிறுவர்கள் ஓய்வுநாள் பள்ளியில் கலந்து கொள்ள, காங்கேரில் கல்லறைத் தோட்டம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஏப்ரல்-23**

**அருட்பணியாளர்: திரு. சுக்ராம் சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆமசாரா, மட்டாவாண்ட், ஜம்ஹரி, சிங்நார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காக, நாராயண்பூர் மாணவர் விடுதியின் முன்னாள் மாணவர்கள் ஐக்கியம் சிறப்பாக நடைபெற்றதற்காக, சிப்பர்ஸ் விசுவாசிகள் பாடுகளின் நடுவிலும் விசுவாசத்தில் நிலைத்து நிற்பதற்காகத் துதிப்போம். அன்ஸ் (வலிப்பு நோய்), பிரமீளா (பக்கவாதம்), ஜெய்மன் கோடா (தோல் நோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற, சாந்தி நகரில் நடைபெறும் ஓய்வுநாள் பள்ளியில் மாணவர்கள் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. சன்பதி காவ்டே**

தெலங்கா, பாலார், மெட்டாமில்லி ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருவதற்காக, குமிடியின் மகன், லகோட்னி ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ரனாய் (மனநோய்), வந்தனா (நினைவு இல்லாமை) ஆகியோர் நிறைவான சுகம் பெற, ரேகா விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சொனாரு கொர்ரம்**

பிர்ஜி கச்லாம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஏனோஸ், மகிமா, லக்சன்

குழந்தை ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சம்ராவின் குழந்தை, நிதின் ஆகியோர் நிறைவான சுகம் பெற, கோட்டாபென்னூர் விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

ஏப்ரல்-24

**அருட்பணியாளர்: திரு. சுரேஷ் பவசாகர்**

ரோஹித் குமார் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, அம்பலி படுர், படேரா பாலி, குசுரு பகெல் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, முகேஷ் பாய், பவித்ரா ஆகியார் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராஜிவ் பவசாகர், சுனந்தர் பாக் ஆகியோர் நிறைவான சுகம் பெற, மம்தா கருட்டுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**மத்திய இந்தியா - மகாராஷ்டிரா**

**அருட்பணியாளர்:**

**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

பிரபாகத் கீதம் சுகம் பெற்றதற்காக, கர்வா, படாடி, பாபுபேட், அகர்ஜாரி, அடேகாவ், ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களில் சிறப்புக்கூட்டங்கள் நடைபெற்றதற்காக, மாலைநேர வகுப்புகள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, ஜுனோனாவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

**மத்தியப் பிரதேசம்**

**அருட்பணியாளர்:**

**திரு.கமல் மனோடியா**

பால்சிங் பாய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சோகதி பாய், ஸ்ரீகரன் பாய், பிரேம்சிங் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, பஞ்சுராவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-25

**திரு. சந்தோஷ் பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட முர்பா, தண்டர் ஆகிய பகுதிகளுக்காக, பூமி மண்டாலே விஷப்பூச்சிக் கடியிலிருந்து சுகம் பெற்றதற்காக, மட்பாவில் 11பேர் திருமுழுக்குப் பெற்றதற்காகத் துதிப்போம். சேவாக் ராம் மண்டாலே (மன நோய்), சந்தோஷ் முரளி, புத்திபாய், சுந்தரிய மார்கம் ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்:**

**திரு. குந்தர் பகெல்-திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டாடாபானி, பயாக்குரா ஆகிய கிராமங்களுக்காக, காணாமல் போன சுபோத் டிர்கி திரும்ப கிடைத்ததற்காக, பயகுராவில் சிறப்புக்கூட்டங்கள் நடைபெற்றதற்காக, ராபினுக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். ஹுமியா கிராமத்தில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. மங்கள் மராண்டி**

**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராம்பூர், குஸ்சிரா, கேட்பாந்தா ஆகிய கிராமங்களுக்காக, முனி முர்மு புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, லோகிராம் கிஷ்கு, கல்ஹஜோர் மணி மராண்டி ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காக, மஞ்லி மராண்டி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சடலி மராண்டி, ஸ்ரீஜல் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-26

**உத்தரப்பிரதேசம்**

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி-ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**

**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, சிவா பாய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, விஜயலட்சுமி, சுனிதா தேவி ஆகியோர் சுகம் பெற்றதற்காக, சாந்தி தேவி, பாப்லி தேவி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, சீதாராம் நற்செய்தி அறிவிப்பதற்காகத்

துதிப்போம். ஜோதி தேவி, ராம் பகதூர், ரஞ்சித் குமார், ராகினி தேவி ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மிதிலேஷ்குமார்–**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, பகவான் தின் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, ஹுரைலால், கல்பனா தேவி, சோனி தேவி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். லஜ்ஜாவதி, குசும் தேவி, கஜல் ஆகியோர் சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள், ராம் சாகர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**
**அருட்பணியாளர்:**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, கானூரு, குப்ரகுண்டா ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் காந்தம்மாவுக்காகத் துதிப்போம். ஜெஸ்ஸியின் கர்ப்ப கால பெலவீனங்கள் மாற, முழங்கால் வலி மற்றும் சரீர பலவீனங்களோடு போராடும் நாகம்மாவுக்காக, ஆனந்த் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற– இரட்சிக்கப்பட, கானூரு கிராமத்தில் வாலிபர்களைச் சந்திக்க எடுக்கப்படுகிற முயற்சிகளுக்கு பலன் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

**ஏப்ரல்-27**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குர்ரப்பதோட்டா, டொட்லவாரமிட்டா மற்றும் குப்ரகுண்டா ஆகியபகுதிகளுக்காக, இந்த மாதத்தில் நடைபெற்ற பின்தொடர் பணி ஊழியங்களுக்காகத் துதிப்போம். இந்த மாதத்தில் சந்திக்கப்பட்ட செஞ்சம் அவ்வா, ஹெரி, ரவி ஆகியோருடைய இரட்சிப்பிற்காக, புதிய "ஏனாதி" ஊழியர்கள் அறிமுகங்கள் கிடைக்க, ஏனாதி மக்கள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிந்தாரெட்டிபாளம், வெங்கடரெட்டி காலனி, ஹரநாதபுரம் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட சாய், ஹர்ஷா ஆகியோருக்காக, ஊழியர் மற்றும் ஊழியருடைய தந்தையின் சரீர சுக பெலன் ஆரோக்கியத்திற்காக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம், மாகாபா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட கெங்கய்யா, விஜயம்மா,சுரேஷ் ஆகியோருடைய இரட்சிப்பிற்காக, பொது தேர்வு எழுதிக்கொண்டுள்ள பிளஸ்ஸிக்காக ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**
**அருட்பணியாளர்:**
**திரு. சாமுவேல் பிரபாகர்**

**ஏப்ரல்-28**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோமன்பூர், விஸ்வந்த்பூர் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட ராகம்மா குடும்பத்திற்காக, சரீர பலவீனத்தோடு காணப்படும் ஊழியரின் ஆரோக்கியத்துக்காக ஜெபிப்போம்.

ஒடிசா

**அருட்பணியாளர்:**
**திரு. டேனியல் சாந்தா**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, பாலிதிஷ் படோர், பாதாபடோர் ஆகிய கிராமங்களுக்காக, மஹன் சாந்தா போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஊழியரின் அக்காவிற்கு அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். படாஹாரில் ஆராதனை நடத்துவதற்கு இடம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, லால்சாஹி பரசுண்டி கண் பார்வை பெற்றதற்காக, சாலு, சுதர்சன் பாய், ராமச்சந்திரா பெஹரா பெங்காளி மக்கள் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, சிலு, நவ்லால், பிம், லட்சுமி, ஜெயந்தி ஆகியோர் நற்செய்தியைக் கேட்டதற்காகத் துதிப்போம். பிங்கி, சாந்தி, ஜெயந்தி, பூர்ணசந்திரா, சீதா, தனமதி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-29

**அருட்பணியாளர்:**
**திருமதி. ஜானகி மாஜி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார், குமரகுடா, பானுவா குடா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லெலன் தௌங்கல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோராபுட் பகுதிக்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, வேதபாட வகுப்பு, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**(வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்:**
**திரு. தர்மேந்திரா தெப்பர்மா**
**(மே. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிம்னா கிராமத்திற்காக, வீட்டுக்கூட்டம், உபவாச ஜெபம், வேத பாட வகுப்பு, வீடு சந்திப்பு ஆகியவை நடைபெற்று வருவதற்காகத் துதிப்போம். அம்ரித் தெப்பர்மா, சபான் கர்மேகர், அனிதா கிருஷ்ணாபாய் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஏப்ரல்-30

**அருட்பணியாளர்:**
**திரு. மங்லியான்லம் (வ.திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்க்ராய்க்காக, கசவுராய் ரியாங் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். விசுவாசிகள் ஒற்றுமையுடன் வாழ, ஆவிக்குரிய வாழ்வில் வளர, ஊழியருடன் இணைந்து ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஹௌகௌலால் சாம்தே**
**(வ. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டங்கபாராவுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, லிலேந்திரா ரியாங் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். டங்கபாரா விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மென்டு தெப்பர்மா**
**(மே. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சித்தாய் கிராமத்திற்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம், வேதபாடக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, கிஷோர் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக – இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, மலைகா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மண்டு தெப்பர்மா, நிருவின் சகோதரன் ஆகியோர் இரட்சிக்கப்பட, பபித்ரா போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.





# நற்செய்தி நூல்களில் அருட்பணி 17

Dr.N.J. ஞானையா

ஜான் "இயேசு போதுமே" என்ற பாடலைப் பாடிக்கொண்டு வருகிறார். மாணிக்கமும் ஆசிரியர் சாலமோனும் சற்று நேரம் கழித்து வந்து சேர்ந்து கொள்ளுகிறார்கள்.

**சாலமோன்**: பல வாரங்களாக, நாம் பழைய ஏற்பாடு நமக்குக் காட்டும் அருட்பணி பற்றிய செய்திகளைப் பேசினோம்.

இன்றிலிருந்து, புதிய ஏற்பாட்டிற்குச் செல்லுகின்றோம். இதுவரை, நாம் படித்ததில் உங்களைத் தொட்ட கருத்து ஏதும் உண்டா?

**ஜான்**: கண்டிப்பாக, நம் உரையாடல்களுக்கு முன்னர், பழைய ஏற்பாட்டின் கடவுள், யூதர்களுக்கு மட்டுமே என்ற ஒரு தவறான கருத்து என்னிடம் இருந்தது.

ஆனால், கடவுள் யூதர்களை மட்டுமல்ல, எல்லோரையும் நேசிப்பவர்–தொடக்க முதலே அவர் மற்றவர்கள் பேரிலும் கவலை கொண்டவர், என்னும் உண்மை எனக்கு விளங்கியது.

**மாணிக்கம்:** "தோட்டத்தில் தொடங்கிய நற்செய்தி" என்று நாமும், நமது உரையாடல்களைத் தொடங்கினோம்.

ஜான் சொன்னதைப்போல, மற்ற இனத்தாரும் உண்மைக்கடவுளைக் கண்டு கொண்டதை, மோசேயின் மாமனார் எத்திரோ, மனந்திரும்பிய சீரியப்படைத்தலைவர் நாகமான், ஆகியோரின் வரலாறு என்னை அதிகம் தொட்டது எனலாம்.

**ஜானும் மாணிக்கமும்** சேர்ந்து: வெளியினப்பெண்கள் பற்றிப் படித்தோமே! தாமார், ராகாப், ரூத், பத்சேபாள், மோசேயின் மனைவி சிப்போராள் ஆகியோரின் வரலாறுகள் எங்களைத் தொட்டன.

**சாலமோன்**: இருவருமே மிக அழகாகப் பதில் சொன்னீர்கள். புதிய ஏற்பாட்டில் யூதர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேறுபாடே கிடையாது என்னும் வசனங்களும் உண்டு. ஜான், ரோமர் 2:10-11 ஐ வாசி.

**ஜான்:** (வேகமாக வேதாகமத்தைப் புரட்டி வாசிக்கிறார்): முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

**மாணிக்கம்:** தேவனிடத்தில் பட்சபாதமில்லை என்னும் சொற்றொடர் திருவிவிலியத்தில் "கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**சாலமோன்**: மிக அழகான மொழிபெயர்ப்பு. கலாத்தியர் 3:28இலும் மிகத்தெளிவாக "யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை" என்று அதே கருத்தை வாசிக்கிறோம்.

**ஜான்:** எனக்கு ஒரு கேள்வி . பழைய ஏற்பாட்டில் வரும் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டில் எப்படி நிறைவேறுகின்றன?

**சாலமோன்**: நல்ல கேள்வி ஜான். ஓர்

எடுத்துக்காட்டாக, ஆபிரகாமுக்கு கடவுள் கொடுத்த வாக்குறுதி, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 12:3) என்பது.

அதையே, ஆண்டவர் இயேசுவின் கடைசிக் கட்டளையான, "சகல இனத்தாரையும் சீஷராக்குங்கள்" (மத்தேயு 28:19) என்னும் வசனத்தில் பார்க்கிறோம்.

**மாணிக்கம்:** ஏசாயா 49:6இல் இஸ்ரவேலைக் கடவுள் "ஜாதிகளுக்கு ஒளியாக" வைப்பேன் என்று கூறுவது, இயேசு, "நீங்கள் உலகிற்கு ஒளியாக இருக்கிறீர்கள்" (மத்தேயு 5:14) என்பதற்கு இணையாக இருக்கிறதல்லவா?

**சாலமோன்**: ஆம் மாணிக்கம். மிக அருமையாகச் சொன்னாய். நம் ஆண்டவர் இயேசுவின் வாழ்வை நான்கு நற்செய்தி நூல்களும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

அருட்பணியில், "அனுப்புதல்" என்னும் ஒரு செயல் மிகமிக முக்கியமானதாகும். ஏசாயா 6:8இல் "யாரை நான் அனுப்புவேன்?" என்னும் கேள்வியைப் பார்க்கிறோம்.

அது ஆண்டவரின் வாழ்வில் நிறைவேறியதை, நற்செய்தி நூல்களில் படிக்கிறோம். இயேசு அருட்பணிக்கு அனுப்பும் காரியங்கள் உங்களுக்கு நினைவில் வருகிறதா?

**ஜான்:** ஆம்! மத்தேயு 9ஆம் அதிகாரம் கடைசி வசனங்களில் (9:37-38) "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறியது என் நினைவில் வருகிறது.

**மாணிக்கம்:** ஜான் சொன்ன மத்தேயு 9இல், அனுப்பும்படி ஜெபிக்கக் கூறிய ஆண்டவர், மத்தேயு 10ஆம் அதிகாரத்தில் 12 சீடர்களை அனுப்பினார் என்று வாசிக்கிறோம்.

**சாலமோன்**: மிக நன்றாகச் சொன்னாய்



மாணிக்கம். அதே செய்தி, அதாவது, ஆண்டவர் 12 சீடர்களை அனுப்பியது, மாற்கு நற்செய்தி நூலிலும் (மாற்கு 6:6-13) லூக்கா நற்செய்தி நூலிலும் (லூக்கா 9:1-6) வருகிறது.

**ஜான்:** சார், எனக்கு ஒரு கேள்வி? முதலில் அந்தப் பன்னிரண்டு சீடர்களை அனுப்புகையில் "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமல், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமல், காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத்தேயு 10:5-6) என்று கூறினாரே அது ஏன்?

**சாலமோன்**: நம் மொழியில் ஒரு பழமொழி சொல்லுவார்களே- "அறையில் ஆடி பின்னர் அம்பலத்தில் ஆடவேண்டும்" என்று. அதுபோல், முதலில், இஸ்ரவேலரிடத்தில் அவர்களின் ஊழியம் தொடங்க வேண்டும்.


பின்னர், மற்ற இடங்களுக்குச் செல்லலாம். உயிர்த்தெழுந்த ஆண்டவர் கூறிய கட்டளை அப்போஸ்தலர் 1:8இல் அழகாக இருக்கிறது. அதிலும், முதலில் எருசலேம் - யூதேயா, பின்னர் சமாரியா- அதன்பின் உலகின் கடைசிபரியந்தம்.

**மாணிக்கம்:** நல்ல விளக்கம். ஆனால்,

எனக்கொரு கேள்வி. அப்போஸ்தலர் 1:8இல் எருசலேம் இருக்கும் யூதேயாவையும், பின்னர் சமாரியாவையும் சொன்ன ஆண்டவர், ஏன் கலிலேயாவைச் சொல்லவில்லை.

**ஜான்:** நானும் அதே கேள்வியை நினைத்ததுண்டு.

**சாலமோன்:** (லேசாக சிரித்துக்கொண்டு) நல்ல மாணவர்கள் - நல்ல கேள்விகளைக் கேட்பார்கள்.




அதற்கு விடை மத்தேயு 4:12-16 வரையில் உள்ளது. மாணிக்கம் அதை வாசிப்பாயா?

**மாணிக்கம் :** (விரைவாக வேதாகமத்தைத் திறந்து) "யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு கலிலேயாவுக்குப் போய், நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமில் வந்து வாசம் பண்ணினார்.

கடற்கரையருகிலும், யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும், நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே, இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது"

**சாலமோன்:** மத்தேயு 9:35இல் "இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி அவர்களை சொஸ்தமாக்கினார்."

ஆகவே, தன் ஊழியத்தில் பெரும்பங்கு கலிலேயாவில் செய்து, அம்மாநிலம் முழுவதும் நற்செய்தியை அறிவித்து விட்டதால், அப்போஸ்தலர் 1:8இல் கலிலேயா இடம்பெறவில்லை.

அதுமட்டுமல்ல, உலகின் கடைசி நாட்களைப்பற்றிப் பேசுகையில் "இராஜ்யத்தின் இந்த சுவிசேஷம் பூமியெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசிங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" (மத்தேயு 24:14) என்றும் கூறினார்.

ஆகவே, காணமல் போன வீட்டாரான யூதர்களைமட்டுமல்ல, காணாமல் போன எல்லா மக்கள் மீதும் அவர் கரிசனை கொண்டிருந்தார் என்பது உறுதி. நேரமாகிவிட்டது. அடுத்த வாரம் சந்திப்போமா?

**ஜானும் மாணிக்கமும்:** மிக்க நன்றி சார். கண்டிப்பாக சந்திப்போம்.

**அடுத்த மாதமும் தொடருவோம்...**

**தேவனிடத்தில் பட்சபாதமில்லை என்னும் சொற்றொடர் திருவிவிலியத்தில் "கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.**

வாலிபர் பகுதி

# இன்றைய கிறிஸ்தவ சூழலில் கடவுளோடு வளர்வது எப்படி?

திரு. சந்தோஷ் கணேசன்.

இந்த கேள்விக்கு நேரடியாக பதிலை பார்ப்பதற்கு முன்பதாக, சில அடிப்படைச் சத்தியங்களை, வேதாகமத்திலிருந்து தெரிந்து கொள்வோம். முதலாவது கிறிஸ்தவர்கள் என்றால் யார் என்பதற்கு, வேதாகமத்தை உற்று நோக்கும்போது, அப்போஸ்தலர் நடபடிகள் 11:26 இவ்வாறு சொல்கிறது: "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று."

இந்த வசனத்தின் அடிப்படையில் சீஷர்கள்தான் கிறிஸ்தவர்களாக முடியும். கிறிஸ்தவக் குடும்பத்தில் அல்லது ஊழியரின் குடும்பத்தில் பிறந்ததாலோ, கிறிஸ்தவப் பெயர் வைத்திருப்பதாலோ, திருச்சபைக்கு வழக்கமாக செல்வதாலோ யாரும் கிறிஸ்தவர்கள் ஆகிவிட முடியாது.

அப்படியென்றால் சீஷர்கள் யார்? ஒரு நான்கு சக்கர வாகன பழுது பார்க்குமிடத்துக்கு, வாலிபர் ஒருவர் வேலைக்கு சேருகிறார். அவருக்கு முதலில் ஒன்றும் தெரியாது, அதனால், அங்குள்ள பழுதுபார்ப்பவரை உற்று கவனித்து, அவர் சொல்வதைக் கேட்டு, அப்படியே கற்றுக் கொண்டு, அவரைப்போல சிறந்த பழுது பார்ப்பவராக இந்த வாலிபர் மாறுகிறார்.

இதுபோன்றுதான் இயேசுவை தன் குருவாக ஏற்றுக்கொண்டு, அவரை மட்டுமே கவனித்து, அவரிடத்தில் கற்றுக் கொண்டு, அவரைப் போலவே மாறுவதற்குத் தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து, அவரைப் பின்பற்று பவர்கள் சீஷர்கள்.

இவர்களைத்தான் வேதாகமம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறது. மற்ற அனைவரும் வெறும் பக்தர்கள் மட்டுமே! பக்தர்கள் தேவைக்காக இயேசுவைத் தேடுவார்கள், சடங்காச்சாரமாக எல்லாவற்றையும் செய்வார்கள். ஆனால், இயேசுவை பின்பற்றவும், அவரைப் போல மாறவும் முன்வர மாட்டார்கள்.

இன்றைய கிறிஸ்தவச் சூழலை நாம் கவனிக்கும்போது, சபைக்குள் பதவிக்காக போட்டிகள்-சண்டைகள், சுய விருப்பத்தை பிரசங்கம் செய்வது, கள்ளப் போதனை, ஜாதிப் பிரிவினை, ஆராதனை என்ற பெயரில் இசைக்கும்-பாடகருக்கும் முக்கியத்துவம் கொடுப்பது, அபிஷேகம்-அந்நிய பாஷை என்ற பெயரில் வேதாகமத்தில் குறிப்பிடாத போதனைகளை திரித்து, பொய்யாக போதிப்பது, ஒருவரை ஒருவர் நேசிக்க தவறுவது போன்றவை ஆக்கிரமித் திருக்கின்றன.

குறிப்பாக, வாலிபர்கள் நடுவில் சமூக வலைதளங்களாலும், தவறான உறவுகளால் ஏற்பட்ட பாதிப்பினாலும், பலர் கடவுளை விட்டுப் பின்வாங்கி, சபைக்கு வருவது குறைந்து கொண்டே வருகிறது.

இதற்கான காரணத்தில் ஒன்று இவர்கள் பக்தர்களாகவே இருக்க விரும்புவதுதான். மத்தேயு 11:29இல் இயேசு கிறிஸ்து, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார். ஆனால், இன்றையக் கிறிஸ்தவர்கள் பிற தலைவர்களையோ, ஊழியர்களையோ, அரசியல்வாதிகளையோ, திரைப்படப் பிரபலங்களையோ கவனித்து, அவர்களி டமிருந்து கற்றுக்கொள்வதால்,

அவர்களைப் போலவே மாறிவிடுகிறார்கள். தனது சொந்த விருப்பங்களை கட்டாயமாக நிறைவேற்ற விரும்புகிறார்கள்.

இதுபோன்ற சூழல்களில், நாம் சரியான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கும், கடவுளோடு உள்ள உறவில் இன்னும் வளர்வதற்கும், நாம் இயேசு என்னும் குருவை உற்று நோக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படியில்லாத சூழலில், உலக மனிதர்களுக்கு சீஷராக மாறி, அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டால், ஆவிக்குரிய வாழ்க்கையில் வீழ்ச்சியடைந்து, பின்மாற்றம் அடைந்து சோர்ந்து போய்விடுவோம்.

நமது குரு எப்பொழுதுமே இயேசு கிறிஸ்து மட்டுமே ஆவார். மனிதர்களின் விருப்பத்தை நிறைவேற்றாமல், இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு சேவை செய்து, அவரது விருப்பத்தை நிறை வேற்றுபவர்கள்தான் உண்மையான சீஷர்கள்.

எளிமையாகப் புரிந்துகொள்ள கீழ்க்கண்ட 3L-ஐ நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:

**1. L – Like the Master** (குருவைப் போலவே மாறுதல்) – லூக்கா 6:40

**2. L – Listen to the Master** (குருவைக் கவனித்தல்) – 2 கொரி 3:18

**3.L – Learn from the Master** (குருவினிடத்தில் கற்றுக்கொள்ளுதல்) – மத் 11:29

**1. Like the Master.**

"சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல; தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்" (லூக்கா 6:40) என்ற வார்த்தையின்படி, உண்மையான சீஷர்கள், குருவாகிய இயேசுவைப் போல சிந்தித்து, கடவுளுடைய விருப்பத்தைச் செய்வதையே தன்னுடைய உணவாக நினைத்து, இயேசு கிறிஸ்து வாழ்ந்து காட்டிய வழியில் நடந்து, வாழ்ந்து காட்டுகிறவர்களே.

**2. Listen to the Master.**

குருவைப் போல மாறுவது தானாக நடக்காது. அதற்கான முதல்படி, குருவை கவனிப்பதே. மனிதர்களையும் சூழ்நிலைகளையும் அல்ல, குருவாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி இருப்பதே மாற்றத்தின் ஆரம்பம். அதனால்தான் எபிரேயர் 12:1இல்... இயேசுவை நோக்கி ... பொறுமையோடே ஓடக்கடவோம் என்று கூறுகிறது. நாம் அவரை நோக்கிப் பார்க்கும்போது, அவரைப் போல மாற்றுகிறார்.

**3. Learn from the Master.**

கவனிப்பது மட்டுமே போதாது. அடுத்த படி, அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வது—இதையே இயேசு மத்தேயு 11:29இல், "என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். அவருடைய சாந்தமும் தாழ்மையும் நம் வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டு மென்றால் அவரைக் கவனித்து வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

எனவே, ஒரு உண்மையான சீஷன்:

* குருவை கவனிக்கிறான் (Listen).

*குருவிடத்தில் இருந்து கற்றுக்கொண்டு வாழ்க்கையில் அதை நடைமுறைப்படுத்துகிறான் (Learn).

*குருவைப் போலவே மாறுகிறான் (Like).

அதனால், நம்முடைய குருவாகிய இயேசுவை நோக்கி, அவரிடத்தில் இருந்து கற்றுக்கொண்டு, அவர் நடந்த பாதையில் நடக்கும்படி ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

**இயேசுவை தன் குருவாக ஏற்றுக்கொண்டு, அவரை மட்டுமே கவனித்து, அவரிடத்தில் கற்றுக்கொண்டு, அவரைப் போலவே மாறுவதற்குத் தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து, அவரைப் பின்பற்றுபவர்கள் சீஷர்கள்.**

## 2026 மார்ச் மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
டேவிட் ஜெயச்சந்திரன்
ஆசீர்வாதம்
ஹேமலதா வில்சன்
ஆண்ட்ரூஸ்
மனோகராஜ்
ஜெபரூபி ஏசுராஜ்
ஞானசிரோன்மணி
ஜான்சி காமராஜ்
ஷீலா சுரேஷ்
பீலோ சாமுவேல்
அருள்மொழி ஜான்சன்
தெல்மா ஸ்டான்லி
சம்பு ஜெயச்சந்திரன்
ரெத்னாபாய் ஜேசுதாசன்
கலா செல்வகுமாரி
வினோதினி
பங்கஜம் மார்த்தாண்டம்
சுசீலா ஆபிரகாம்
குளோரி மல்லிகா
ஜெமி ஸ்டீபன்
ரஜினி பியூலா ஷோபிகா
ஜெர்லி இம்மானுவேல்
கிறிஸ்டி ஜான்சன்
வெற்றிச்செல்வி
ஜெயராணி மோகன்
ராணி ஸ்டான்லி பால்

**கன்னியாகுமரி**
லலிதா நெல்சன்
மோகன் சி கமலம்
டேவிட் மனோகர்
ரெத்னா ராஜ்குமார்
பிரேமா ஜெரால்டு
எப்சிபா றசல்
தேவசகாயம்
பமீலா எட்வின்
ஜெபஜோதிபாய்
லில்லி புஷ்பம்
பிராகரன்ஸ் தங்கராஜ்
டெய்சி டேவிட்

**திருநெல்வேலி**
ஜேன் தர்மராஜ்
வசந்தா பாலசேகரன்
மேரி ஜோசப்
ரூத் கமலம்
விஜயவல்லி ஜான்
கஸ்தூரி எலியாஸ்
சந்திரலீலா திரவியம்
பாக்கியம்
ஜெபா நியூட்டன்
வயலட் கிறிஸ்டோபர்
பத்மா ராஜையா
சூர்யகுமாரி ஜெயராணி
செல்வராஜ்
சாந்தி ராஜன்
நூர்ஜி
கிளாடிஸ் ராஜையா
வில்லியம் பிரெடெரிக்
ஜாஸ்மின் சாம்சன்
செல்வி பொன்னரசி
ரூத் ஜெயராணி அன்புராஜ்
ரோஸ்லின் ஜோசப்
வில்லி பொன்னுத்தாய் செல்வராஜ்
சுந்தரி ஸ்டீபன்
ரெஜினா சாலமோன்
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
ஞானசுந்தரி நாகராஜன்
தாமஸ்
ஹெலன் ஸ்வீட்
சந்திரபோஸ்
சந்திரா தாமஸ்
ஜோதிமாலா மனுவேல்
கிரேஸ் அகஸ்டின்
ஜெயசிங்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
ஜெபக்குட்டி மோசஸ்
பெட்ரிசியா ஜஸ்டஸ்
ரேச்சல் தங்கராஜ்

**தென்காசி**
செல்வி ஜேக்கப்

**தூத்துக்குடி**
தேவகிருபை
அன்னத்தாய் ஆல்பர்ட்
ரூபவல்யா
லீலா டேவிட்சன்
ஹெலன் திலக்
குளோரி செல்வராஜ்
ஸ்டான்லி ராஜாமணி
ஜோதிமணி வில்சன்
சந்திரா ஜெயராஜ்
குயின் குவான்
பாக்கியராஜ்
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
கிருபாசனம் ரெமீஜியஸ்
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
ரெத்னாவதி முத்துராஜ்
சுதா டேவிட்
ஆனி இன்பநாயகம்
ஷேபா கோயில்பிச்சை
ஆலீஸ் குணசீலி
தியாகராஜன்
ஞானமணி ஹெப்சிபா
அந்தோணியம்மாள்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
புஷ்பராணி ஜேம்ஸ்
பிரான்சிஸ் சுதாகர்
அமிர்தகனி

**சென்னை**
லதா கிரேஸ்
மடோனா
பெர்ணாண்டோ
கிரேஸ் தங்கத்துரை
சாந்தி டென்னிசன்
ரோஹிணி ஜேசன்
டோரிஸ் பிலோமினா
அன்னாள் ஜான்
கரோலின் ராஜகுமாரி
ஷீலா சேகர்
செலின்ராணி டேவிட்
ஹில்டா எலிசபெத்
யூனிஸ் ரிச்சர்ட்
டேவிட் ஜெயகுமார்
ராபின் தாமஸ்
ஜெயச்சந்திரன்

**திருச்சி**
டேவிட்
ஜெபமணி டேவிட்
சூசன்னா
ராணி
திலீப்குமார்
ஜெபசீலி ஜெயகொடி
சிசிலியா ஜெயபிரகாஷ்
ஜூலி கிளமென்ட்
லில்லியன் ஜோசப்
ஆரோக்கியராஜ்

**கோயம்புத்தூர்**
ஆனந்தன்
கிறிஸ்டிபாய் வாசன்
ஈவ்லின் மோகன்
அருணோதயம் வில்லியம்
சின்னக்கண்ணு தனபால்
ஜான்சி
வசந்த மல்லிகா

**தேனி**
எலிசபெத் பால்ராஜ்
பொன்ராணி அன்புநாதன்
சுசீலா ஜான்
நேசமணி சாமுவேல்
ஜாய்ஸ் தேவராஜ்
மாலா வில்சன்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்
ஜான் ஜெயகுமார்

**தஞ்சாவூர்**
ஜோசப்பின் செல்லத்தாய்
ரோஸலின் செல்வராணி
சாந்தி குணசேகரன்
பிரமீளா செல்வம்

**சிவகங்கை**
அன்பு கமலம்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
சரோஜினி துரைராஜ்
ரூத் நேசமணி
இமாகுலேட்
பென்னி
ஜெயகுமாரி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
பால்ராஜ்
சூர்யா ரிச்சர்ட்சன்
சில்வியா ராஜகுமாரி

**நீலகிரி**
ஜெரில்டா டேனியல்
ஜாய்ஸ் ஸ்டீபன்ராஜ்
நிர்மலா ராஜன்

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்
அனிதா குமாரி
பழனியம்மாள்

**திருப்பூர்**
கனகசத்தியவதி

**விருதுநகர்**
பொன்னுத்தாய்
பிளாரன்ஸ் ராஜமோகன்
ஞானசெல்வன்

**கள்ளக்குறிச்சி**
வசந்தா செல்வராஜ்

**திண்டுக்கல்**
கெத்ஸி எலிசபெத்
குளோரி மனோகர்
அகஸ்டி ராபர்ட்

**வேலூர்**
மெர்ஸி புளோரா

**செங்கல்பட்டு**
சாலமோன் ராஜா
ஆனந்தி கருணாகரன்

**திருவண்ணாமலை**
திரவியம்

**இராமநாதபுரம்**
ஸ்டெல்லா வசந்தகுமாரி

**கடலூர்**
செல்லபாய்

# வேத வினாக்கள்

**மே - 2026**

**(1 கொரிந்தியர்: 9 முதல் 16 அதிகாரங்கள் வரை)**

**பொருத்துக**

1. ஸ்தேவான் – பாதாளம்
2. அகாலப்பிறவி – சகிக்கும்
3. மரணம் – பர்னபா
4. கைத்தொழில் – தரிசனம்
5. நம்பும் – அகாயா நாட்டில்

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ..... மனுஷனாகிய ..... ஜீவாத்துமாவானான் ..... ஆதாம் ..... ஆவியானவர்.
2. இப்பொழுது ..... ..... ..... இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் ..... பெரியது.
3. ..... பலியிடுகிறவைகளை ..... அல்ல ..... பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன். நீங்கள் ..... ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை.
4. ..... நான் பிரசங்கித்து வந்தும் ..... பாராட்ட எனக்கு ..... அது என் மேல் விழுந்த .....
5. நான் ..... விண்ணப்பம் பண்ணினால் என் ..... விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் ..... பயனற்றதாயிருக்கும்.

**விடை எழுதுக**

1. பவுலுக்கு அநுகூலமான கதவு எங்கே திறக்கப்பட்டிருக்கிறது?
2. எதினால் நாம் நியாயந் தீர்க்கப்படோம்?
3. நீங்கள் யாருக்கெல்லாம் இடறலற்றவர்களாயிருக்க வேண்டும்?
4. மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருக்கிறது என்ன?
5. தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் எப்படி பேசுகிறான்?

**தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**வேதவினா விடை,**
**வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

**மார்ச் மாத வேதவினா-விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**



1 திருமதி. **டோரிஸ் பிலோமினா** – **சென்னை**
2 திருமதி. **குளோரி மனோகர்** – **திண்டுக்கல்**
3 திருமதி. **குயின் கூவான்** – **தூத்துக்குடி**

# நடப்புச் செய்திகள்

**வாக்காளர்** அடையாள அட்டையை காண்பிக்க இயலாவிட்டால், தேர்தல் ஆணையம் பரிந்துரைத்துள்ள ஆதார் உள்ளிட்ட 12 ஆவணங்களை காட்டி வாக்களிக்கலாம் என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும். அதை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக, தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ள 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும். அதன்படி, ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப்பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, அல்லது ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை, இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், பாராளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றைக் காண்பித்து வாக்களிக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**வாஷிங்டன்**: அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிப்பவர்களை அந்நாட்டு அரசு அவர்களது சொந்த நாடுகளுக்கு நாடு கடத்தி வருகிறது. இந்நிலையில் ஒரு புதிய திட்டத்தை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. ஆவணங்கள் இல்லாத இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வருவோர் இலவசமாக தங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்காக இந்த திட்டத்தை அமெரிக்காவின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை சமூக வலைதளத்தில், "நீங்கள் ஒரு புதிய தொடக்கத்துடன் உங்கள் தாய் நாட்டுக்கு செல்லலாம். சிபிபி ஹோம் என்ற செல்போன் செயலியைப் பயன்படுத்தி நீங்களாகவே உங்கள் நாட்டுக்கு செல்ல முன்வரும் போது இலவச விமான டிக்கெட் மற்றும் வெளியேறுவதற்கான 2,600 அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.2.41 லட்சம்) போனஸ் தொகையைப் பெற்றிடுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளது. இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டு வருவோருக்கு எந்தவித சட்டச் சிக்கலும் இல்லாமல் அவர்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஆவணமின்றி சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரை கண்காணிப்பதற்கான செலவுகளைக் குறைக்கவும், காவல், நீதித்துறை அமைப்புகளின் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும், அதே நேரத்தில் முறைசார்ந்த நாடு கடத்தலுடன் தொடர்புடைய சட்டரீதியான தண்டனைகளைத் தனி நபர்கள் தவிர்க்கவும் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

**புதுடெல்லி**: பெண்களுக்கு எதிராக கடந்தாண்டில் 76,657 சைபர் குற்றங்கள் நடந்துள்ளதாக தேசிய சைபர் குற்றம் இணைய தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, மாநிலங்களவையில் எழுத்துப் பூர்வமாக பதில் அளித்த மத்திய உள்துறை இணையமைச்சர் பந்தி சஞ்சய் குமார் கூறியதாவது: பெண்களுக்கு எதிராக கடந்த 2022ல் 62,224, 2023ல் 40,066, 2024ல் 48,335 மற்றும் 2025ல் 76,657 சைபர் குற்றங்கள் நடைபெற்றுள்ளதாக தேசிய சைபர் குற்றப் பதிவு இணையதளம் தெரிவிக்கிறது. கடந்த 2024ம் ஆண்டை விட 2025ல் 28,322 குற்றங்கள் அதிகம் நடைபெற்றுள்ளன. கடந்தாண்டில் ஆபாச படங்கள் தொடர்பான புகார்கள் 37,743 பதிவாகியுள்ளன. பாலியலை தூண்டும் செயல்கள் தொடர்பாக 19,703 புகார்கள் வந்துள்ளன. பாலியல் வன்கொடுமை தொடர்பான தகவல்களை அனுப்பியதாக 8,780 புகார்கள் வந்துள்ளன. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தகவல்களை அனுப்பியதாக 10,431 புகார்கள் வந்துள்ளன. ஆன்லைன் மற்றும் சமூக ஊடகம் தொடர்பான குற்றங்களும் அதிகரித்துள்ளன. 2021ல் 72,301, 2022ல் 1,31,634, 2023ல் 1,41,264, 2024ல் 1,57,054 மற்றும் 2025ல் 1,73,766 குற்றங்களும் பதிவாகியுள்ளன. சட்டம் ஒழுங்கு மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. பெண்களுக்கு எதிரான குற்றங்களை சட்ட அமைப்புகள் மூலம் விசாரித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளிடம் உள்ளன. இவ்வாறு பந்தி சஞ்சய் குமார் தெரிவித்தார்.

நன்றி: தி இந்து தமிழ் திசை (19/03/2026)

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

58/1 முத்தாலம்மன் கோவில் தெரு, சேலையூர், சென்னை-73
94459 24440 email: contacticgm@gmail.com


## அருட்பணியாளர்களின் குழந்தைகள் கல்வி நிதிக்காக...

கிறிஸ்துவுக்குள் அன்பான ஊழியப் பங்காளர்களுக்கு,

நம் ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

தேவனுடைய கிருபையினால், நம் ஆண்டவர் ஒவ்வொரு ஆண்டும் உங்களைப் போன்ற கொடுப்பவர்களை எழுப்பி, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) 75 மிஷனரி பிள்ளைகளின் கல்வித் தேவைகளை சந்தித்து வருகிறார். உங்களது தொடர்ந்த ஆதரவுக்கும் தாராள மனதுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் இந்த தேவையைத் தாழ்மையுடன் உங்கள் முன் வைக்கிறோம். கல்விச் செலவுகள் மிகவும் அதிகரித்துள்ளதால், பள்ளி–கல்லூரிக் கட்டணம், புத்தகங்கள் மற்றும் பிற அவசியமான கல்வி உபகரணங்களுக்கான செலவுகள் மிஷனரி பெற்றோருக்கு மிகவும் சவாலானவைகளாக இருக்கின்றன.

இந்த பிள்ளைகளுக்கான உங்கள் அன்பான உதவி, அவர்களின் எதிர்காலத்திற்கான முதலீடாக மட்டுமல்லாமல், மிஷனரிப்பணியில் நீங்கள் பங்கெடுப்பதையும் காட்டுகிறது. நிச்சயமாக, உங்கள் மனமுவந்த பங்களிப்பிற்காக ஆண்டவர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

எழுதியிருக்கிறபடி, "பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". (2 கொரிந்தியர் 9:6)

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) மிஷனரி பிள்ளைகளுக்கான உங்கள் தொடர்ந்த ஆதரவை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேவன் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

நன்றியுடன்,
கிறிஸ்துவின் பணியில்.

**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
பொதுச்சேவகர்
28 மார்ச் 2026.

உங்களுடைய விருப்பத்தைத் தேர்வு செய்து இந்தத் தேவையைச் சந்திக்க வாருங்கள்.

| | |
|---|---|
| ₹1000 ☐ | ₹2000 ☐ |
| ₹5000 ☐ | ₹10000 ☐ |

**நம்முடைய மொத்தத்தேவை ரூ.16.00 இலட்சமாகும்**

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number : 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai- 600073**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi

ICGM

**ஆன்லைனில் காணிக்கை அனுப்புபவர்கள் மேலே உள்ள வங்கிக்கணக்கிற்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS/Whatspp) அனுப்பவும். உங்களுக்கு இரசீது அனுப்ப உதவியாயிருக்கும்**

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**
**Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026**
**Posted at BPC Madurai - 625 001.**
**Date of publishing: 27th March 2026** **Date of posting - 28th,29th and 30th March 2026.**

Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

## பொதுச்சேவகரிடமிருந்து தொடர்ச்சி...

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அருள்திரு. டேவிட் சாலமோனை உங்களுடைய ஜெபத்தில் தாங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தேவன்தாமே அவரைத் தொடர்ந்து வழிநடத்தவும், இயக்கத்திற்கான தரிசனத்தில் நிலைநிற்கவும், இறைப்பணியை நிறைவேற்றவும் பெலப்படுத்துவாராக.

மே மாதத்தில் 14 மாநிலங்களிலும் கோடை விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தத் திட்டமிட்டு, அதற்காக ஜெபித்து வருகிறோம். ஜுன் மாதத்தில் அருட்பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்க வேண்டும். பலவிதமான இடையூறுகளுக்கு நடுவில் அருட்பணியாற்றும், நமது அருட்பணியாளர்களின் பாரத்தில் பங்கு கொள்ள வேண்டியது நமது பொறுப்பல்லவா? ஆகவே, இதற்காகவும் ஜெபித்து, உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பரமன்பட்டியில் கட்டப்பட்டு வரும் அருட்பணியாளரின் வீடு கட்டுமானப்பணி விரைவில் முடிவடைந்து, அதில் நமது அருட்பணியாளர் குடியேறி, அருட்பணியைத் தொடர ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
**பொதுச்சேவகர்.**
28 மார்ச் 2026.

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,
Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.
Cell : 94459 24440**

icgm1014@sbi

ICGM

**To:**